பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00



ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில்

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT



# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 15 வியாழக்கிழமை (29.05.2003) தொலைபேசி - 2223378 ஒலி 161


## சமாதான முயற்சியில் சோர்மானம்

# முற்றுப் பெறாத முடிவுகளோடு எரிக்சோல் நாடு திரும்பினார்!



(கொழும்பு)

நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் நேற்று நோர்வேக்குப் பயணமாகியுள்ளார்.

கடந்த 24-ம் திகதி இலங்கையை வந்தடைந்த இவர் தேக்கமடைந்திருக்கும் சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிக்கச் செய்வதிலும் டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகளை பங்கு பற்றச் செய்வதிலும் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

அத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் முக்கிய அமைச்சர்களுடன் சமாதான முயற்சிகளின் நகர்வுத் திட்டங்கள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமையக முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு இறுதி நேரத்தில் முயன்றபோதும் அது கைகூடவில்லை.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பதில் கடிதத்தை வன்னக்கு எடுத்துச் செல்ல தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் முயன்றபோதும், அதில் இறுதி நேரத்தில் ஏற்பட்ட தடுமாற்றத்திலேயே அம் முயற்சியும் கைகூடவில்லை.

தற்பொழுது நோர்வேத் தூதரக அதிகாரிகள் மூலம் பிரதமரின் பதில்க் கடிதம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பவைக்கப்பட்டுள்ள நிலையில், புலிகளின் பதில் வெளியாவதில் காலதாமதம் ஏற்படும் என்பதாலும்,சமாதான நடவடிக்கைகளில் உறுதியான முடிவுகள் எதுவும் எட்டப்படாமல் இழுத்தடிப்புகளும் கால தாமதமும் ஏற்பட்டுள்ளதாலும்,நிலைமையை சாவகாசமாக அவதானிக்கும் நோக்கிலேயே எரிக்சோல்ஹெய்ம் நோர்வேக்குப் பயணமாகியுள்ளார்.(இ)

## மூதூர் கட்டை பறிச்சானில் புலிகள்-இராணுவம் சந்திப்பு

(திருகோணமலை)

மூதூர் கட்டைப்பறிச்சான் சூனியப் பிரதேசத்தில் இராணுவத்தரப்பிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

கட்டைப்பறிச்சான் சூனியப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக கூடாரத்தில் திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் யான்லேடான் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் விடுதலைப் புலிப்புலிகள் தரப்பில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன், திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரும் இராணுவத் தரப்பில் பிரிகேடியர் சகீர்,பிரிகேடியர் சேனவீர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் ஏற்படும் பல பிரச்சினைகள் குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. (ந-3)



மூதூர் கட்டைப் பறிச்சானில் விடுதலைப்புலிகளுடன் இராணுவத்தினரும் கண்காணிப்புக் குழுவினரும் சந்தித்த போது ...

### மட்டு-அம்பாறையில் உள்ள

## புலிகளின் அரசியல்துறை அலுவலகங்கள் மூடப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் இயங்கிவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

அரசியல் துறை அலுவலகங்களில கடமையாற்றிய அரசியல் துறை உறுப்பினர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மட்டு-அம்பாறை அரசியல் துறை அலுவலகங்களில் இடம் பெற்று வந்த அரச,அரச சார்பற்ற மற்றும் பொது அமைப்புக்களுடனான சந்திப்புக்களும் தற்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கொக்கட்டிச் சோலையிலேயே இடம் பெற்று வருகிறது.

இதேவேளை மட்டு-அம்பாறை மாவட்டங்களில் 15 அரசியல் துறை அலுவலகங்கள் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-14)

# ஜப்பான் மாநாட்டில் 35 நாடுகள் பங்கேற்பு

## பூர்வாங்க வேலைகளைக் கவனிக்க அமைச்சர் மிலிந்த அங்கு பயணம்

(நமது நிருபர்)

**ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அடுத்த மாதம் 9-ம்,10-ம் திகதிகளில் நடைபெறவுள்ள இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் 35 நாடுகளும் 20 சர்வதேச நிதி நிறுவனங்களும் பங்கேற்கவுள்ளதுடன்,அமெரிக்காவின் சார்பில் அந்நாட்டின் துணை வெளிவிவகார அமைச்சர் ரிச்சாட் ஆமிடேஜ்ஜும் கலந்து கொள்ளவுள்ளார்.**

அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வார்களா?அல்லது கலந்து கொள்ள மாட்டார்களா என்பது குறித்த சரியான முடிவுகள் எதுவும் அறிவிக்கப்படாத நிலையில் மாநாட்டுக்கான சகல ஏற்பாடுகளையும்,ஜப்பான் அரசு மேற்கொண்டுள்ளது.மாநாட்டிற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்காக பொருளாதார விஞ்ஞான மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று ஜப்பானுக்குப் பயணமாகியுள்ளார்.

ஏற்கனவே திட்டமிட்டவாறு யப்பானில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளை பங்கு கொள்ளச்செய்வதற்கு சர்வதேச சமூகம் குறிப்பாக ஜப்பான், நோர்வே,அவுஸ்ரேலியா போன்ற நாடுகள கொடுத்து வரும் அழுத்தங்களின் மத்தியில் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான அரசின் நிலைப்பாடு குறித்த பிரதமரின் கடிதம் வடுதலைப் புலிகளுக்கு அனுப்பி

(10ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக யோசனை சுதந்திரக் கட்சி நிராகரிப்பு!

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதற்கென முன் வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு நிராகரித்து தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு நேற்றுக் கூடி ஆராய்ந்த போதே மேற்கண்டவாறு நிராகரித்து தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

அத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா

(10ம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் பதில் கடிதம் புலிகளிடம் கையளிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை தொடர்பான விடயங்களுக்கு,பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவின் பதில் அடங்கிய கடிதம் நேற்று உத்தியோக பூர்வமாக நோர்வேத் தூதரக உயர் அதிகாரிகளால் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 1.30மணிக்கு அரச வான்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியில் கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வேத் தூதரக மூத்த அதிகாரி ஹேரல்ஹிட் மற்றும் நோர்வேத் தூதரக இரண்டாவது செயலாளர் தோமஸ் ஹக்லண்ட் ஆகிய இருவரும் பிரதமரின் கடிதத்தை விடுதலைப் புலிகளிடம் கையளித்தனர்.

கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வேத் தூதரக அதிகாரிகளை வரவேற்ற சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவர்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அமெ.தூதரக அரசியல் அதிகாரி

# நேற்று யாழ்ப்பாணம் வருகை

## அரச அதிபரை அழைத்து நிகழ்கால நிலைவரத்தை விரிவாகக் கேட்டறிந்தார்

(தென்மராட்சி)

**யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய அரசியல் நிலை, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை, அதிஉயர் பாதுகாப்பு வலயம் மற்றும் மிதிவெடி அகற்றல் பணி தொடர்பான விடயங்களைநேரில் அறியும் பொருட்டு கொழும்பிலுள்ள ஐக்கிய அமெரிக்கத் தூதரக அரசியல் அதிகாரி கிறிஸ்லோங் நேற்றை தினம் யாழ்ப்பாணம் வருகைதந்திருந்தார்.**

தூதரக அதிகாரியான திருமதி பத்மினி ராஜதுரையுடன் யாழ்ப்பாணம் வந்திருந்த கிறிஸ்லோங் நேற்றுக்காலை யாழ்.பீச் இன் ஹோட்டலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், மாவட்டத் தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.நடராஜா ஆகியோருடன் கலந்துரையடினர்.

இச்சந்திப்பின்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் இயல்பு நிலை, மக்களின் தொழில் மற்றும் ஜீவனோபாய முறைமைகள், புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்கள், மீள் குடியமர்வுக் கொடுப்பனவுகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்படுகள் என்பன பற்றி விபரமாகக் கேட்டறிந்தார்.

அங்கு அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கருத்து வெளியிடுகையில்,

யாழ். மாவட்டத்தில் தற்போது ஒரு சில இடங்களில் மட்டுமே இயல்பு நிலை ஏற்பட்டுள்ளது. பல பகுதிகளில் இயல்புநிலை ஏற்படவில்லை என்றும் குறிப்பிட்டார். உதாரணத்திற்கு யாழ். பீச் இன் அமைந்துள்ள பகுதிக்கு சற்று அப்பால் பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவது பெரும் சோதனையும், வேதனையும் மிக்க சம்பவமாக இருக்கின்றனது.

### மீனவர் நிலை

மீனவர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கடலுக்குச் சென்று மீன் பிடித்தாலும் விற்பனை செய்வதில் பெரும் சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின்றன எனவும் யாழ். மாவட்டத்தில் இதுவரை மொத்தமாக 40ஆயிரம் குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர். ஆயினும் இதுவரை 5ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே மீளக் குடியமர்வுக் கொடுப்பனவாகிய 25 ஆயிரம் ரூபாவழங்கப்பட்டுள்ளது.

மீதியானவர்களுக்கும் இத்தொகை வழங்குவதற்கு நிதியின்மை பெரும் தடங்கலாக உள்ளது. யாழ். மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் தமது இயக்த்திற்கு ஆட்களைத் திரட்டுகிறார்கள் என்பது பற்றிய குற்றச்சாட்டுக்களோ அல்லது தகவல்களோ இதுவரை தனக்குக் கிடைக்கவில்லைஎன்று தெரிவித்தார்.

மேலும் யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றி அமெரிக்கத் தூதரக அரசியல் அதிகாரி அரசாங்க அதிபரிடம் வினா எழுப்பிய போது இங்கு ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற போதிலும் கூட ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே தமிழீழ விடுதலைப் புலிகளை நேரடியாக ஆதரிக்கின்றனர். ஏனைய மூவரில் ஒருவர் அமைச்சர் மற்றைய இருவர் ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிட்டார்.

### பொருளாதார நிலை

அடுத்து யாழ். மாவட்ட மக்களின் சமூக பொருளாதார நிலைப்பாடுபற்றி அரச அதிபர் குறிப்பிடும் போது சுமார் ஒருலட்சத்துப் 11ஆயிரம குடும்பங்கள் இன்னமும் அரசின் உலர் உணவு நிவாரணப் பொருட்களிலேயே தங்கியுள்ளன. வேலை வாய்ப்பின்மை இங்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. அதிஉயர் பாதுகாப்பு வலயம் காரணமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்னமும் தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலையிலேயே தொடர்ந்தும் இருந்து வருகின்றன எனக்கூறினார்.

அமெரிக்கத்தூதரகத்தின் அரசியல அதிகாரி கிறிஸ்லோங் தேர்தல் திணைக்களத்தின் உதவிஆணையாளரான எஸ்.நடராஜாவுடன் கலந்துரையாடிய சமயம் யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தக் கூடிய வாய்ப்புகள் பற்றியும் திணைக்களத்தின் தேர்தல் பணிகள் பற்றியும் விபரமாகக் கேட்டறிந்து கொண்டார்.

அச்சமயம், யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்களத்தைப் பொறுத்தமட்டில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலுக்குரிய பணிகளில் 80வீதமானவை பூர்த்தியாக்கப்பட்டு விட்டதாகவும் அரசு தீர்மனிக்கும் பட்சத்தில் தேர்தலை நடத்தக் கூடிய நிலைமை உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அதிகாரி தென்மராட்சி பிரதேசத்திலுள்ள சரசாலைக் கிராமத்துக்கு விஜயம் செய்து அமெரிக்க ரொங்கோ அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மிதிவெடி அகற்றும் பணியின் முன்னேற்றங்களை நேரில் பார்வையிட்டார்.

அத்துடன் நேற்று மதியம் யாழ்ப்பாணத்தில் பணி செய்யும் சில சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகளையும் யாழ். பீச் இன்னில் சந்தித்து உரையாடினார் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான நடராஜா - ரவிராஜ் நேற்று மாலை இவரைச் சந்தித்து உரையாடியதாகவும் அறியப்படுகின்றது.

(உ-77,4)

## சட்டவிரோத மின்பாவனைக்கு படையினரும் ஒத்துழைப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் சட்டவிரோத மின்சாரம் பெறுவோரால் உயிராபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

ஒற்றை வயர் மூலம் நீண்ட தூரத்திற்கு சட்டவிரோத மின் இணைப்புப் பெறப்படுவதால் இரவு நேரத்தில் அவற்றிற்குக் கீழாகச் செல்வோர் பயப் பிராந்தியுடன் காணப்படுகின்றனர்.

இதேவேளை, இந்த முறையற்ற செயலுக்குப் படையினர் ஒத்துழைப்பு வழங்கிவருவதாகவும் பொதுமகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(உ-51)

### புற்றுநோய்ச் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து வருகைதரவுள்ள புற்று நோய் வைத்திய நிபுணர் யூன் மாதம் 3,4ஆம் திகதிகளில தெல்லிப்பழையில் அமைந்துள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைகளை வழங்கவுள்ளார். (உ)

### ஒன்று கூடல்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான ஒன்று கூடல் இன்று வியாழக்கிழமை மு.ப 9 மணிக்கு தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைமை அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது (உ-8)

### கூட்டம்

(காரைநகர்)

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை அபிவிருத்திச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் எதிர் வரும் முதலாம் ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு சங்கத்தலைவர் மா.ரத்தினசிங்கம் தலைமையில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-246)

## டோக்கியோ நிதி மூலம் பலமடையும் அரசு

# போரை மீண்டும் நாடாது என்பதற்கு

# எந்த உத்தரவாதமும் இல்லை

## கேணல் கருணா அம்மான் தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

சிங்கள தேசம் எமது போராளிகளின் இடையறாத தாக்குதல்கள் காரணமாக பொருளாதார ரீதியில் பலவீனப்பட்டதாலேயே சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தது. எனவே டோக்கியோ மாநாட்டில் பெறும் நிதியின் மூலம் மீண்டும் தன்னைப் பலப்படுத்திவிட்டு மீண்டும் பழைய நிலைக்குச் செல்லாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்து பொருளாதார ரீதியில் பலம் பெற நாம் ஒருபோதும் துணை போக மாட்டோம்.

எத்தகைய சவால்களுக்கும் முகம் கொடுக்கக்கூடியவாறு எம்மைப பலப்படுத்தவேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். நாம் அனைவரும் ஒன்றுபட்டு குறிக்கோளை விரைவுபடுத்த வேண்டிய நிலையில் உள்ளோம் என்று மட்டக்களப்பு.அம்பாறை மாவட்ட விசேட தளபதி கேணல் கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தரவை இராணுவத் தளத்தில் இடம்பெற்ற தரவை முகாம் தாக்குதலின் எட்டாவது ஆண்டு நினைவு தின வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்த கருணா அம்மான் மேலும் கூறுகையில்,

நோர்வேப் பிரதிநிதிகள் வன்னிக்கும் கொழும்புக்குமிடையில் தூது சென்று வருகின்றார்கள்.

அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்தில் இருதரப்பும் கலந்து கொண்டால் நிறைய உதவிகளை வழங்கவுள்ளதாக நன்கொடை நாடுகள் கூறியுள்ளன. நிச்சயம் தருவார்கள்.

ஆனால், அந்த நிதி வடக்கு-கிழக்கை கட்டியெழுப்பப் பயன்படுத்த வேண்டும் என்பதே எமது தலைவரால் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால் அவ்வாறு பெறக்கூடிய நிதியை பயன்படுத்த உகந்த நிர்வாக கட்டமைப்பு இல்லை. சிரான் அமைப்பு அத்தகைய அதிகாரங்களைக் கொண்டிருக்கவில்லை.

போர் நிறுத்தம் ஒரு வருடத்திற்கு மேலாக அமுலில் இருக்கிறது. சிங்களப் படையினர் வடக்கு-கிழக்கில் இன்னமும் கோவில்களிலும் பொதுமக்கள் வீடுகளிலும் பாடசாலைகளிலும் உள்ளனர். ஒரு சில பாடசாலைகளில் இருந்து வெளியேறினாலும், மதிலோடு முகாமிட்டுள்ளனர். ஆனால் தலைநகரில் வீதித் தடைகள் அகற்றப்பட்டு இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

போராளிகளை இழந்து பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் மிகுந்த பொறுமையுடன் கலந்து கொண்டோம். இதனால் சர்வதேசம் எங்களை சிறந்த விடுதலை அமைப்பாக நோக்குகிறது என்று கேணல்கருணா அம்மான் தெரிவித்தார். (உ)

## நிவாரணம் வழங்கும் போது பிளாஸ்ரிக்கைத் தவிர்க்குமாறு

## அமைச்சர் கோரிக்கை

(கொழும்பு)

வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள சகல நிவாரணப் பணியாளர்களையும் பொலித்தீன், பிளாஸ்ரிக பைகள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள் என்பவற்றைப் பயன்படுத்த வேண்டாம் என சிறுதோட்ட அபிவிருத்தித்திட்ட அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே கேட்டுள்ளார்.

வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள சகல நிவாரணப் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ள அமைச்சர் புஞ்சி நிலமே, நிவாரண விநியோகத்தின் போது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களினை பயன்படுத்துவதை இயன்றளவில் தவிர்க்குமாறு கேட்டுள்ளார். (உ-10)

## தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் படைஅதிகாரியுடன் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி கேணல் ராஜிதசில்வாவை தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்கள் நேற்று முன் தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

233வது படைப்பிரிவின் கட்டளைத் தலைமையகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழ்க் கட்சிகளின் சார்பில் ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணியின் தேசிய அமைப்பாளர் ஆர்.துரைரட்ணம், ஈ.பி.டி.பியைச் சேர்ந்த பரணிதரன் மற்றும் பிரதீபன் புளொட் அமைப்பைச் சேரத்ந்த பகிரதன், யூலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது எதிர்வரும் ஜூன்மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ள உளளூராட்சித் தேர்தல் குறித்தும் தமிழ்க் கட்சிகளின் பாதுகாப்புக் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-5)

# ஊடகத்துறை அமைச்சர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி மீண்டும் எச்சரிக்கை

(கொழும்பு)

அரச அச்சகக் கூட்டுஸ்தாபனத்தில் வர்த்தமானியை அச்சடிக்கக் கூடாதென சட்டவிரோதமாக உத்தரவிட்டிருக்கும் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மீது உரிய நடவடிக்கை எடுக்காது போனால் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் என்று ஜனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்றதை அடுத்து, ஜனாதிபதிக்கும் ஊடகத்துறை அமைச்சருக்கும் ஏற்பட்ட முறுகல் நிலையின் பின்னணியில் ஜனாதிபதி இவ்வாறு எச்சரித்துள்ளார். இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

அக் கடிதத்தில் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டே அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான பிரகடனத்தை எடுத்தேன். ஆனால் ஊடகத்துறை அமைச்சர் இந்த விடயத்தில் தேவையில்லாமல் தலையிட்டு அரச வர்த்தமானி பிரகடனத்தை அச்சிட வேண்டாம் என உத்தரவிட்டுள்ளார்.



அரசியல் அமைப்புச் சட்டத்தில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி லொத்தர் சபையை எனது பொறுப்பில் எடுக்கும் பிரகடனத்தை விடுத்தேன்.

எனவே, இதனை யாரும் தவறாகக் கருதினால் அது தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் சட்ட ஆலோசனையை பெறலாம் என்று உள்ளது.

(வ)

### நாட்டின் தேசிய உற்பத்திக்கான

# மாகாண மட்டப் பங்களிப்பு சமமான வீதத்தில் இல்லை

### மத்திய வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் மொத்தத் தேசிய உறபத்திக்கான மாகாண மட்டப் பங்களிப்பு சமமான வீதத்தில் இல்லை என்பது, மத்திய வங்கி அண்மையில் மேற்கொண்ட ஆய்வு மூலம் தெரிய வநதுள்ளது.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டு காலப்பகுதி இவ் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது, மேல் மாகாண சபையின் பங்களிப்பு 46சதவீதமாகவும், மத்திய சப்பிரகமுவ, வடமேல், தென்மாகாணங்களின் பங்களிப்பு 38சதவீமாகவும், ஊவா, வடமத்திய, வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பங்களிப்பு 10சதவீதமாகவும் இருப்பது தெரியவந்துள்ளது.

இயற்கை வளங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், பௌதீக ஆளணி வளங்கள் ஆகியவற்றைப பொறுத்த மட்டில், மாகாணங்களுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நீக்க வேண்டியதன் அவசியம் இதன் மூலம் தெளிவாகியிருப்பதாக மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

(தி)

# இந்தியாவுடனான வர்த்தக உறவு வெற்றிகரமாக நகர்கிறது

## அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கும்-இந்தியாவிற்கும் இடையிலான சுதந்திர வர்த்தக நடவடிக்கைகள் பெரும் வெற்றியடைந்து வருவதாக, முதலீட்டு ஊக்குவிப்பு கைத்தொழில் கொள்கை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.



இந்திய வர்த்தக கண்காட்சியை பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரை நிகழ்த்துகையில்:

மேற்படி இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்தி அதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்தும் நோக்கில் செய்து கொள்ளப்பட்ட வர்த்தக உடன்படிக்கை எதிர்பார்த்ததை விட வெற்றிகரமாக செயற்படுகிறது.

கடந்த வருடத்தில் மாத்திரம், இத்தகைய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு அமைய ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

(உ-10)

# பாதாள உலகத்தினரை தேடி வலை விரிப்பு

(கொழும்பு)

குற்றச் செயல்களில் ஈடுபட்டுவரும் பாதாள உலக குழுக்களை சேர்ந்தோரை கைதுசெய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

கொட்டக தெனியாவில அமைக்கப்பட்டுள்ள புதிய பொலிஸ் நிலையத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே ஜோன் அமரதுங்கா இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் தொடர்ந்து கூறுகையில்:

பணத்திற்காக கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வரும் பாதாள உலக நபர்கள் தற்போது ஜனாதிபதியின் மாளிகைக் கருகிலும் நடமாடி வருகின்றனர்.

அத்துடன், கடந்த காலங்களில் ஒரு சிலர் அரசியல் நோக்கங்களிற்காக பாதாள உலகக் குழுக்களை பயன்படுத்தி வருகின்றனர்.

இத்தகைய செயல்களைத் தடுத்து நிறுத்துவதன் பொருட்டு, பாதாள உலக குழு உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் அனைவரையும் உடனடியாக கைது செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எனக்கு வழங்கிய ஆலோசனையை அடுத்தே, இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-10)

# தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் தொழில் வழிகாட்டல் பிரிவு ஏற்பாட்டில், இன்று காலை 9.30மணிக்கு யா/வரணி மகாவித்தியாலயத்தில் அப்பாடசாலையில் கல்வி பயிலும் க.பொ.த (சா/த) மற்றும் (உ/த) மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

(உ)

# வாசுகியின் "மருதத்திணை" வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் மன்ற ஏற்பாட்டில் செல்வி வாசுகி சொக்கலிங்கம் எழுதிய "மருதத் திணை" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 2ம் திகதி திங்கட் கிழமை பி.ப.3மணிக்கு யாழ். பல்கலைக் கழக கேட்போர் கூடத்தில் தமிழ் மன்றத் தலைவர் ந. சத்தியவேந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை சு.து. ஷண்முகநாதக் குருக்கள், வாழ்த்துரையை துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ், வெளியீட்டு உரையை தமிழ்த்துறைத் தலைவர் அ. சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

கருத்துரைகளை ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி இ. பாலசுந்தரம்பிள்ளை, மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி யோ. சிவப்பிரகாசம், மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி ச. சிவச்சந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ. திருநாவுக்கரசு ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளார்.

(உ)

# செயலமர்வு

(கோப்பாய்)

தரம் 5ல் கல்வி கற்பிக்கும் கோப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நல்லூர் கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு யாழ். வலய கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்திலும் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளதாக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(உ-79)



காரைநகர் கிழவன் காடு முருகன் கோவிலில் இடம்பெற்ற இந்து மாநாட்டு எழுச்சிவிழாவில், கிழவன் காடு கலாமன்ற மாணவிக்ளின் பண்ணிசை நிகழ்வையும் சிறப்புரை நிகழ்த்த வருகை தந்த தமிழகத்தைச் சேர்ந்த புலவர் இரா. ராஜேஸ்வரி மற்றும் சங்கீத பூசணம் சிவசண்முகமூர்த்தி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:- காரைநகர் நிருபர்)





யாழ். உதைபந்தாட்ட சங்கம் அண்மையில் நடத்திய கருத்தரங்கில் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, கருத்தரங்கில் பங்கேற்ற ஒருவருக்கு சங்கத்தின் சின்னம் பதித்த ரீசேட்டை அன்பளிப்பு செய்வதையும் சங்க உத்தியோகத்தர்கள் ஒரு சேர அமர்ந்திருப்பதையும் படங்களில் காண்கிறீர்கள். (படங்கள்:- சுண்டுக்குளி நிருபர்)




பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் நடைபெற்ற முதியோர் "கௌரவ" சேமிப்புக் கணக்கு ஆரம்ப விழாவை முதியோர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றனர். (பரு. நிருபர்)



ஆவரங்கால் இந்து இளைஞர் மன்றத்தின் தையல் பயிற்சி தொடக்க விழாவில், வலிகிழக்கு பிரதேசசபையின் செயலர் க. வெங்கடாச்சலம் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் மற்றும் மன்றத் தலைவர் செ. தவராசசிங்கம், கிராம உத்தியோகத்தர் க. கிருஸ்ணன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம்:- நவக்கிரி நிருபர்)

# நெடுந்தீவில் மங்கையர்க்கரசி வித்தியாலயம் நிறுவி கல்விச் சேவை புரிந்த ஆசான் கணபதிப்பிள்ளை

ஓவென்றலறும் ஓதக் கடலையும் காலைப்பதம் பார்க்கும் கோளான கற்பாறைகளும் எம் சோகங்கள் சொன்னாலும்; வண்ணப்பனந் தோப்பும்,வனப்புமிகு பட்சிகளும்,



ஆவினங்கள், பரியினங்கள்,நன்னீர்க் கிணறுகளும், கல்விச்சாலைகளும் அணி செய்யும் எழிற் தீவாம் நெடுந்தீவின் தொன்மைகளைச் சொல்லத் துடிக்கும் பொழுதெல்லாம் கல்விச்சமூகமே எம் கண் முன் நிழலாடும்.

தமிழினக் கல்விப்புலத்தின் மூல வேர்களும் முது விருட்சங்களுமாய்த் திகழ்ந்தவர்கள் அநேகமாகக் கிராமப்புறத்தவர்களே ஆவர். எங்கே வறுமை குடியேறுகின்றதோ அங்கே அட்சய பாத்திரங்களும் அவதாரம் எடுக்கின்றன. எமது தீவின் வரலாற்றின் மிக நீண்ட கல்விச் சேவையாற்றியவர்கள் பலர் வாழ்நதும்-வாழ்ந்து காட்டியும் சென்றுள்ளனர். கல்வியல் பல துறைகளிலும் நன்கு தெளிந்த புலமையும்,அறிவும் கொண்டதோடு, சமூகத்தை நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்பப் பணி செய்யும் பக்குவத்தையும் கொண்டிருந்தனர். இதைப் பல சம்பவங்கள் மூலமும் செவி வழியாகவும் அறிகின்றோம்.அந்த வகையில் நெடுந்தீவின் கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி சமய,சமூக ,பண்பாட்டு வளர்ச்சிப் போக்கிலும் மிக முக்கிய பங்காற்றியவர் நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயத்தின் ஸ்தாபகரான கந்தையா கணபதிப்பிள்ளை என்பது யாவரும் அறிந்ததே.

## மறைந்தார் மாண்பு

### பிறப்பு

கணபதிப்பிள்ளை, கந்தையா வள்ளியம்மை ஆகியோருக்கு மகனாக ஆயிரத்து தொளாயிரத்து எட்டாம் ஆண்டு மாசி இருபதாம் திகதி (1908.2.20)பிறந்தார். தமது ஆரம்பக்கல்வியை நெடு.சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் பின் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கற்று நல்லாசிரியரானார்.தன் ஆசிரியப் பணியோடு சமய,சமூகப் பணிகளையும் சேர்த்தே மேற்கொண்டார்.

### கல்விப்பணி

தனது இருபத்தோராம் வயதில் ஆசிரியப் பணியைமேற்கொண்ட இவர் பாடசாலைக்கு ஒழுங்கீனமான, இடைவிலகுகின்ற மாணவர்கள் பற்றி ஆராய்ந்ததன் பயனாக மிக நீண்ட தூரத்திலிருந்து -கோட்டைக்காடு,பனங்காணி போன்ற பகுதியிலிருந்து வருபவர்களே பாதிக்கப்படுகின்றனர். அப்பகுதியில் ஓர் பாடசாலையை அமைத்து பெற்றோரினதும் மாணவர்களினதும் இடர்களை, சுமையை நீக்கி வைக்கவேண்டும் என உணர்ந்தார்.இதன் பயனாக 1937ஆம் ஆண்டு ஆனி மாதம் முதலாம திகதி (1937.06.01) நெடுந்தீவு மேற்கில் தனது சொந்த பணத்தில் வாங்கப்பட்ட காணியில் 'மங்கையற்கரசி வித்தியாலயம்' எனும் பெயரில் ஓர் பாடசாலையை நிறுவினார். விரைவாகவே ஒரு நிரந்தரக் கட்டிடத்தையும் அமைத்து அப் பகுதி மக்களின் அறியாமை இருளை நீக்கி கல்விச் சமூகம் ஒன்று பிரகாசிக்க வழி அமைத்தார்.

தனது 43 வது வருட ஆசிரிய சேவையில் சுமார் 30ஆண்டுகள் பல பாடசாலைகளிலும் அதிபராக இருந்து சிறப்பான சேவையாற்றிப் பாராட்டுக்குரியவரானார்.

### சமய,சமூகப் பணி

கடமைநேரம் தவிர ஆலயங்களிலே தோத்திரங்கள் ,புராண படனம் ஓதுதல்,ஆலயத் தொண்டுகளைச் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டார்.

நெடுந்தீவின் சமாதான நீதவானாகவும் ,இணக்கசபையின் நீண்ட காலத் தலைவராகவும் இருந்து மக்களிடையே ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்த்து அவர்களை ஒரு முகப்படுத்தினார். பாடசாலைக்கு வராத பிள்ளைகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களை அழைத்து வருவதோடு பெற்றோருக்கு வேண்டிய அறிவுரைகளையும் உதவிகளையும் செய்தார். அவரதுஉடலைப் போல் உள்ளமும் தூயதாக இருந்ததாலோ என்னவோ எல்லோரும் அவரை வெள்ளை வாத்தியார்-வெள்ளைச் சட்டம்பியார் என அழைத்தனர்.

தூர நோக்கும் தூய சிந்தனையும் கொண்ட அதிபரின் பணி இன்றும் மிகப் பயனுடையதாக விளங்குவதை உணரலாம். அறியாமையின் காரணமாக தமது வாணாளை விரயம் செய்த மக்களை ஒளி மழையில் நனைய வைத்த பெருந்தகை 1979 .09.07ல் தனது 71வது வயதில் இயற்கை எய்தினார்.

அவரது அயராத உழைப்பாலும் தொடர்ந்து வந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர் ஆகியோரின் முயற்சிகளினாலும் இவ்வித்தியாலயம் பிரகாசித்துக்கொண்டே இருக்கிறது. 1.6.2003ல ஸ்தாபகர் மற்றும் அதிபர்களையும் நினைவு கூர்ந்து பாடசாலைச் சமூகம் மனநிறைவு அடையவுள்ளது. □

**கோ. பத்மநாதன்**
அதிபர் யா/நெடுந்தீவு
மங்கையர்க்கரசி வித்தி.

# மனுமீதான விசாரணை 28ஆம்திகதி

(கொழும்பு)

பொது ஜனஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான தேசியப்பட்டியலை ரத்துச் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு கோரும் மனு அடுத்த மாதம் 28ஆம் திகதி உயர் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

லங்கா சமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் இம மனுவை தாக்கல் செய்திருந்தார்.

பொது ஜன ஐக்கிய முன்னணியின பொதுச்செயலாளர் தேர்தல் ஆணையாளா,தேசியபட்டியலில் இடம் பெறும் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இம் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப் பட்டுள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னர் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி லங்கா சமசமாஜக் கட்சிக்கும் தேசிய பட்டியலில் இடம் கிடைக்க வேண்டும் எனவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி வலி. கிழக்கு பிரதேச சபை அதன் எல்லைக்குட்பட்ட பாலர் பாடசாலைகள,சனசமூக நிலையங்கள், நூலகங்கள் என்பவற்றுக்கிடையே இயல் இசை நாடகப்போட்டிகள் மற்றும் பண்ணிசை,மாலைகட்டுதல்,தோரணம் கட்டுதல், கோலம்போடுதல்போட்டிகளை நடத்தவுள்ளது.

அத்துடன் மரம் நடுகை,சிரமதானம் மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (உ)

# ஆஸ்பத்திரி வீதியால் செல்ல பொதுமக்கள் மிகுந்த அச்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ் .ஆஸ்பத்திரி வீதியில் தொடர் அணியாக நிறுத்தப்படும் வாகனங்களால் அவ்வீதி பெரும் ஆபத்து நிறைந்ததாக மாறி வருகின்றது. குறிப்பாக பருத்தித்துறை வீதிக்கும் காங்கேசன் துறைவீதிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் இந் நிலை தொடர்கிறது.

இவ் வீதியின் நடுப்பகுதியில் வாடகை ஊர்திகள் ,துவிச்சக்கர வண்டிகள் மற்றும் அப்பகுதி கடைகளுக்கு பொதி ஏற்றி இறக்கும் பார ஊர்திகள் என்பன தினமும் பெருமளவில் தரித்து நிற்கின்றன.

இதனால் இப்பகுதியில் விபத்துக்களும்,சன நெரிசலும் தொடர்கதையாகி வருகின்றது.

அண்மையில் இவ்வீதியில் இடம் பெற்ற கோர விபத்தில் பெண் ஒருவா பலியானமையும் இதற்கு முன்னரும் பல விபத்துக்கள் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ் வீதியால் பயணிப்போர் எப்போது விபத்து நிகழுமோ என்ற அச்சத்துடன் காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

மேற்படி வீதிப் போக்குவரத்தைச் சீர்ப்படுத்துவது குறித்து போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (உ-4)

# மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட மாதகல் மீனவர்களுக்கு கடனுதவி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ். குடாநாட்டில் வீசிய மினி சூறாவளியினால் மாதகல் பகுதி மீனவர்கள் பல இலட்சம் பெறுமதியான பொருட்சேதங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

மேற்படி மினி சூறாவளி காரணமாக இப்பகுதி மீனவர்களின் வள்ளங்கள்,வலைகள் உட்பட பல பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் அலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்த வகையில்,துறைமுக விநாயகர் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்கு சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் லூத்து மேரி கடற்றொழிலாளர் கூட்டுற வுச் சங்கத்திற்கு 2 இலட்சம் ரூபாவும் ராஜராஜேஸ்வரி அம்மன் கடற்றொழில் கூட்டுறவுச்சங்கத்திற்கு 3 இலட்சத்து20 ஆயிரம் ரூபாவும் புனித தூமையார் சென் தோமஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்திற்கு 14 இலட்சத்து 80ஆயிரம ரூபாவும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கடனுதவிகளை வங்கிகளினூடாகப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாச தலைவர் எஸ். தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இக்கடனுதவி அடுத்த வாரம் முதல் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-43,4,77)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு சம்பந்தமான ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.(உ-7)

# வேட்பாளரல்லாத ஒருவரை மாகாண சபை உறுப்பினராக நியமிப்பது சட்ட விரோதமானது

## உயர் நீதி மன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடாத ஒருவரை மாகாண சபை உறுப்பினராக நியமிப்பது சட்டவிரோதமான தென உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி 1998ஆம் ஆண்டு ஊவா மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடாத சமரவீர வீரபன்னியை பொது ஜன ஐக்கியமுன்னணியின் மாகாண சபை உறுப்பினராக நியமிக்கும் படி கடந்த ஆண்டு தேர்தல ஆணையாளர் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை உயர் நீதி மன்றம் ரத்து செய்துள்ளது.

இதேவேளை,இதற்கு முன்னர் டாக்டர் .பாக்கியசோதி சரவணமுத்து ,டாக்டர்.றொகான் எதிர்சிங்க ஆகியோர் இது சம்பந்தமாக தாக்கல் செய்த மனுவை மேல் நீதி மன்றம நராகரித்திருந்ததும் குறிப்பிடததக்கது.

அதன் பின்னர் இவர்கள் இது தொடர்பான விசேட மனுவை உயர் நீதி மன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

அப்போது உயர் நீதி மன்றம் மேல் நீதி மன்றத்தின் தீர்ப்பை புறக்கணித்து மனுமீதான விசாரணையை மேற்கொண்டிருந்தது. அதன்படி தேர்தல் ஆணையாளர் மாகாண சபை சட்டத்திற்கு முரணாக நடந்துள்ளார் எனறும் ஒரு வேட்பாளருக்காக வாக்களித்த வாக்காளர்களை அல்லது கட்சியை இந் நடவடிக்கை பாதிக்கும் எனவும் உயர் நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

மாக்பெர்ணான்டோ, டி.பி. எஸ். குணசேகரா, சி.வி. விக்கினேஸ்வரன் ஆகியமூன்று நீதிபதிகளைக் கொண்ட குழு இத்தீர்ப்பை வழங்கியுள்ளது. (உ-10)

# வெண்புறா நிறுவன சேவைகள் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

கண்ணிவெடி,மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக வெண்புறா நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவுடன் வெண்புறா செயற்கைக்கால் நிறுவனத்தினர் யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான கண்ணிவெடி அபாய கல்வித் திட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

யாழ். வலயப் பாடசாலைகளில் முதற்கட்டமாக இது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை,இது தொடர்பாக பொதுமக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கொழும்புத்துறை, அரியாலைப்பகுதிகளில் இடம் பெற்று வருகின்றது.

அத்துடன் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் முகமாக ஊனமுற்றோர் பற்றிய விபரங்களை பிரதேச செயலக ரீதியாக யுனிசெவ் நிறுவனமும், வெண்புறா நிறுவனமும் இணைந்து சேகரித்து வருகின்றன.

மேலும்,ஊனமுற்றோருக்கான உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக கழகம் ,சர்வோதயம்,சிறுவர்பாதுகாப்பு நிதியம் போன்றவை வழங்க இருப்பதாகவும் வெண்புறா நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(உ-7)

# முறைசாராக் கல்விக்கு செவிப்புல சாதனங்கள்

(பாசையூர்)

மாகாண கல்வித்திணைக்களம்,தென்மராட்சி வலயத்தில் முறைசாராக்கல்வி போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு செவிப்புல சாதனங்களை வழங்கியுள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி.,அல்லாரை அ.த.க. பாடசாலை ,கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை, மட்டுவில் சந்திர மௌலீச வித்தி., சரசாலை ஸ்ரீ கணேசா வித்.,சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்., வரணி ம.வி.,மிருசுவில் அ.த.க. பாடசாலை,கைதடி நவீல்ட் பாடசாலை ஆகியவற்றிற்கே செவிப்புல சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (உ-72)

# பொங்கல் விழா

(பளை)

இயக்கச்சி முகாவில் திரியாய் அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் ஜுன் மாதம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

யுத்தம் காரணமாக கடந்த1990 ஆம்ஆண்டு முதல் மேற்படி ஆலயத்தில் பொங்கல் உற்சவம் இடம் பெறவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது. (உ-97)

# மாபெரும் மகளிர் சங்கமம்

(மன்னார்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல மகளிர் அமைப்புக்களும் கலந்து கொள்ளும் மாபெரும மகளிர் சங்கம.நிகழ்வு எதிர் வரும் 30ஆம்திகதி முதல் ஜுன்மாதம் 1ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

மன்னார் நகர மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு மன்னார் மாவட்ட மகளிர் துறைப் பொறுப்பாளர் நிலவரசி தலைமை தாங்குவார்.

மேலும் இந்நிகழ்வில் தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்து மகளிர் அமைப்பு பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.(உ-10)

# சனி, வியாழன், ராகு, கேது மாற்றங்களால் ஏற்படும் பொதுப் பலனை அறிந்து கொள்ளுங்கள்!

### சனிமாற்றம் (22.05.2003) பொதுப் பலன்கள்

**22.05.2003இல் சனி இடபராசியில் இருந்து மிதுன ராசிக்கு மாற்றமடைந்து இரண்டரை வருடங்கள் வரை மிதுனத்திலேயே சஞ்சாரம் செய்யும்.**

**23.07.2003 இல் வியாழன் கடக ராசியில் இருந்து சிங்க ராசிக்கு மாற்றமடைந்து ஒரு வருடம் வரை சிங்க ராசியிலேயே வியாழன் சஞ்சாரம் செய்யும்.**

**14.08.2003இல் இராகு, கேதுக்கள் இடபம், விருட்சிகத்தில் இருந்து முறையே மேடம், துலாம் இராசிகளுக்கு மாற்றமடைந்து ஒன்றரை வருடங்கள் வரை அவ ராசியிலேயே சஞ்சாரம் செய்யும். இக்கிரக மாற்றத்தினால் இவ்வருடம் இலங்கையில் அரசியல், இராணுவ, சமூக, பொருளாதார மாற்றங்கள் உண்டாகும்.**

## கன்னி:

*(உத்திரம் 2,3,4 பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 பாதங்களில் பிறந்த கன்னி ராசியினருக்கு சனி பகவான் 22.05.2003 முதல் 26.06.2005 வரை தனஸ்தானம் என்னும் 10ல் இருப்பார்)*

கலங்காத மனமுடைய கன்னி ராசி நேயர்களே! கடந்த 21/2 வருட காலமாக சனி பகவான் 9ல் இருந்து வெளிநாடு செல்லவும் திருப்பணிகளில் ஈடுபடவும் என சுறுசுறுப்புடன் செயற்பட நேர்ந்தது. கடன் குறைந்தன. சமூகத்தில் அந்தஸ்து உயர்ந்தது. தந்தையின் உடல் நலனில் சங்கடம் நேர்ந்தது.

தற்காலம் சனி பகவான் உமது ராசிக்கு 10ல் வருகிறார். 10ஆம் இடம் காரிய ஸ்தானம் ஆகும். கடன் குறையும். பிரயாணம் மிகுந்து காணும். கடின உழைப்பினாலும் விடா முயற்சியினாலும் உமது விருப்பங்கள் நிறைவேறும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் காணலாம். தந்தையுடன் அவ்வப்போது கருத்து வேறுபாடு வர இடமுண்டு. எனினும் சிலருக்கு தந்தையின் வேலை கிடைக்க இடமுள்ளது.

சனி பகவானின் 3,7,10 பார்வையினால் உமது ராசிக்கு 12,4,7 ஆகிய வீடுகளைப் பார்வை செய்வார்.

சனி பகவானின் 3வது பார்வையினால் உமது ராசிக்கு 12வது வீட்டைப் பார்வை செய்வதால் கடன் தீரும். வழக்கில் வெற்றி கிட்டும். வேலைப்பழு கூடும். இதனால் அகால உறக்கம், அகால போஜனம் என அலைக்கழிப்புக்கு உள்ளாவீர்கள். சிலருக்குப் பதவி உயர்வு கிட்டும்.

சனி பகவானின் 7வது பார்வையினால் உமது ராசிக்கு 4வது வீட்டைப் பார்வை செய்வதால் உடல நலனில் கவனம் தேவை. வீடு,மனை, பூமி போன்றவை வாங்க இடமுண்டு. அது சமயம் மூல பத்திரத்தை நன்கு பரிசீலித்து வாங்குவது நலம். உமது கடமையில் கண்ணாக இருப்பது நலம்.

சனி பகவானின் 10 வது பார்வையினால் உமது ராசிக்கு 7வது வீட்டைப் பார்வை செய்வதால் உமது மனைவியின் உடல் நலனில் கவனம் தேவை. கூட்டாளிகளிடம் சற்று அனுசரித்துப் போவது நலம். எந்த வேலையைச் செய்தாலும் அதனை முடித்து வட்டு அடுத்தவேலையைத் தொடங்குவது நன்று. மீதி வைக்கவேண்டாம்.

*வியாபாரிகளுக்கு:* புத்தகசாலை இணையத்தளம், பதிப்பகம், காகிதாதிகள், பிரயாண முகவர் போன்ற பிரிவினர் ஏற்றம் பெறுவர். அரசுக்கு செலுத்த வேண்டிய வரி பாக்கிகளை செலுத்திவிடுவது நலம்.

*விவசாயிகளுக்கு:* நில சீர்திருத்தம் செய்ய இடமுண்டு. மானாவரி நிலம், நீர்ப்பாசனம் பெறும் வாய்ப்புள்ளது. பணப்பயிர் நல்ல விளைச்சல் தரும். விளைபொருளுக்கு நல்ல சந்தைவாய்ப்பு கிடைக்கும். கறுப்பு, பச்சை, சிவப்பு ராசியான பயிர்கள் நல்ல லாபம் தரும்.

*பெண்களுக்கு:* உமது கணவருடன் வெளிநாடு செல்ல இடமுண்டு. சிலர் சுய தொழில் தொடங்க வாய்ப்பு உள்ளது. தந்தை மூலம் தனவரவுக்கு இடமுண்டு. வேலை பார்க்கும் பெண்களுக்கு இடமாறுதல் கிட்டும். தொழில் நுட்பப் பணியில் ஈடுபட்டோர் கடின உழைப்பினால் சாதனை படைப்பர்.

*உத்தியோகஸ்தர்களுக்கு:* நூலகம், தொலைத் தொடர்பகம், தொலைக்காட்சி வானொலி வங்கி கடவுச்சீட்டு அலுவலகம், உல்லாசப் பயணத்துறை போன்ற பிரிவுகளில் பணி புரிவோர் ஏற்றம் பெறுவர். வேலைப் பழுவுடன் கூடிய பதவி உயர்வு கிட்டும்.

*மாணவர்களுக்கு:* வியாபார முகாமைத்துவம், இணையத்தளம், நூலகவியல் போன்றவை பயில்வோர் ஏற்றம் பெறுவர். உயர் கல்வி அல்லது பணிசெய்ய வெளிநாடு செல்ல இடமுண்டு. சிலர் தமது தகுதிக்காக பரிசு, பதக்கம் போன்றவை பெற வாய்ப்பு உள்ளது.

*கலைஞர்களுக்கு:* கதை, வசனம், பாடல் போன்ற பிரிவனர் நல்ல முன்னேற்றம் பெறுவர். வெளியில் செல்லும் போது உடைமைகளில் அதிக கவனம் தேவை. சிலர் சொந்தமாக திரையரங்கு அமைக்க முயன்று வெற்றி காண்பர்.

### குருபகவான் சஞ்சார பலன்

22.07.2003 வரை குரு பகவான் உமது ராசிக்கு 11ல் சஞ்சாரம். இதனால் செல்வச் சேர்க்கை உண்டு. பொதுஜன செல்வாக்குக் கூடும். பதவி உயர்வு கிட்டும். வெளிநாட்டுத் தொடர்பு கிட்டும். இளைய.தகப்பனார் மூலம் அனுகூலம் கிட்டும்.

23.07.2003 முதல் 14.08.2004 வரை குருபகவான் உமது ராசிக்கு 12ல் வருவதால் குடும்பத்தில் சுப செலவுகள் வரும். சிலர் வீடு மாற்றம் அல்லது தொழிலகம் போன்றவற்றில் மாற்றம் காண்பர்.

15.08.2004 முதல் 13.05.2005 வரையில் குருபகவான் ஜென்ம ராசியில் சஞ்சாரம். இதனால் கணவன், மனைவி இருவரும் இணைந்து வெளிநாடு செல்ல வாய்ப்புக் கிட்டும். சரளமான தனவரவுக்கு இடமுண்டு. வீடு, வண்டி, வாகனம் வாங்க இடமுண்டு.

14.05.2005 முதல் குருபகவான் 2ல் வருவதால் குடும்பத்தில் சுப செலவுகள் வரும். மனைவியின் உடல் நலனில் கவனம் தேவை. இத்தருணத்தில் யாருக்கும் பிணை கையெழுத்துப் போட வேண்டாம். புதிய முயற்சிகளில் நல்ல வெற்றி கிட்டும்.

### ராகு பகவான் சஞ்சார பலன்

14.08.2003 வரை ராகு பகவான் உமது ராசிக்கு 9ல் சஞ்சாரம். இதனால் உமது மனைவியின் உடல நலனிலும் உமது தந்தையின உடல் நலனிலும் சங்கடம் உண்டாக வாய்ப்புள்ளது. மிக்க கவனம் தேவை. வெளிநாடு செல்ல வாய்ப்புத் தேடிவரும்.

15.08.2003 முதல் 04.03.2005 வரை ராகுபகவான் உமது ராசிக்கு 8ல் சஞ்சாரம். இதனால் புதிய முயற்சிகளில் கடின பிரயாசை தேவை. மகன் அல்லது மகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். சரளமான தனவரவு இருப்பினும் கடினமான செலவும் இருக்கும்.

05.03.2005 முதல் 21.09.2006 வரை ராகு பகவான் 7ல் சஞ்சாரம். இதனால் கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. மனைவியின் உடல் நலனில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்தில் வில்லங்கம் உண்டாக இடமுண்டு.

### கேது பகவான் சஞ்சார பலன்

14.08.2003 வரை கேது பகவான் உமது ராசிக்கு 3ல் சஞ்சாரம். இதனால் இறை அருள் கூடும். உடல் நலனில் கவனம் தேவை. வயிறு சம்பந்தமான உபாதைகள் வர இடமுண்டு.

15.08.2003 முதல் 04.03.2005 வரை கேது பகவான் உமது ராசிக்கு 2ல் வருவதால் உமது குடும்பத்தில், சிறுசிறு கருத்து வேறுபாடுகள் வரும். எனினும் குரு பலமிருப்பதால் கவலைப்பட இடமில்லை.

05.03.2005 முதல் 21.09.2006 வரை கேது பகவான் உமது ஜன்ம ராசியில் சஞ்சாரம். இதனால் சிலருக்கு இடு மருந்தினால் இன்னல் வர வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை. விநாயகரை வழிபட நலம் கூடும்.

### சனி பகவான் சஞ்சார பலன்

22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிப்பதால் கடன் தீரும், சகோதரவழி உறவுகளில் சங்கடம் விலகும். பாகப் பிரிவினை சுமுகமாக முடியும். பூர்வீக சொத்தில் வில்லங்கம் தீரும்.



11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் ராகுபகவான் சாரத்தில் சஞ்சரிப்பதால் எதிர்பாராத தனவரவுகள் உண்டாகும். வேறு மொழி பேசுவோரால் அனுகூலம் கிட்டும். மின்னியல், இலத்திரனியல் துறையில் அதிக லாபம் கிட்டும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் குரு பகவான் சாரத்தில் சஞ்சாரம். இதனால் வீடு, மனை, பூமி வாங்க இடமுண்டு. சிலருக்கு தாயார் வழியில் பணவரவுக்கு இடமுண்டு. விரும்பிய இடமாறுதல் கிட்டும்.

### சனி பகவான் வக்கிரம்

25.11.2003 முதல் 16.02.2004 மற்றும் 13.11.2004 முதல் 13.03.2005 வரை சனிபகவான் வக்கிரம் ஆக சஞ்சாரம். இதனால் கடன் தொல்லை தராது. சிலருக்கு கணிசமான கடன் தீரவும் இடமுண்டு. நீதிமன்ற வழக்குகளில் சாதகமான தீர்ப்புக் கிட்டும். கருவுற்ற தாய்மார்கள் மிக்க கவனமுடன் இருப்பது நலம்.

## நட்சத்திர பலன்

**உத்திரம்2,3,4 பாதங்களில் பிறந்தவர்களுக்கு:** உமது நட்சத்திர அதிபதி சூரியன். சனி பகவான் 5,6ற்கு உடையவர். இதனால் அரசு வழி அல்லல் அகலும். கடன் தீரும். சிலருக்கு நீண்ட காலக் கடன் வசதி கிட்டும். சிலருக்கு தந்தையுடன் கருத்து வேறுபாடு விலகும்.

**அத்தம் நட்சத்திரத்திற் பிறந்தவர்களுக்கு:** உமது நட்சத்திர நாயகன் சந்திரன். அவர் உமது ராசிக்கு லாபாதிபதி ஆவார். அவர் சனி பகவானுக்கு நட்புத்தான். எனவே பெண்களால் வாழ்வில் வளமும் நலமும் கூடும். பூர்வீக சொத்தில் கணிசமான லாபம் கிட்டும்.

**சித்திரை 1,2 பாதங்களில் பிறந்தவர்களுக்கு:** உமது நட்சத்திர நாயகன் செவ்வாய். சனி பகவானுக்கும் செவ்வாய்க்கும் கிரக யுத்தம் என்பது பொது மரபு. எனினும் சனி பகவான் உமது பூர்வ புண்ணிய அதிபதி. பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் செவ்வாய்க்கு உச்ச வீடு என்பதால் உமக்குசனி பகவானால் தீமை இல்லை.

## தாரா பலன்.

**உத்திரம் 2,3,4 பாதங்களில் பிறந்தவர்களுக்கு:** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் உமது நட்சத்திரத்திற்கு விபத்துத் தாரையில் சஞ்சாரம் செய்வதால் பிரயாணத்தில் மிக்க கவனம் தேவை. குறிப்பாக அரசு அலுவலில் இருப்பவர்கள் அதிக எச்சரிக்கையுடன் இருப்பது நலம்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் க்ஷேம தாரையில் சஞ்சாரம். இதனால் வீடு, மனை, பூமி போன்றவை வாங்க இடமுண்டு. நீண்ட கால நோய் அகலும். மறைமுக வருவாய் பெருகும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனி பகவான் பிரத்யக்கு தாரையில் சஞ்சாரம் செய்வதால் எந்தக் காரியத்தில் ஈடுபடும் போதும் கவனமாக திட்டமிட்டு செயற்பட நன்று. காரசாரமான விவாதம் தவிர்க்கவும்.

**அத்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு:** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் சம்பத்து தாரையில் சஞ்சாரம் செய்வதால் சரளமான பணப்புழக்கம உண்டாகும். பெண்களால் வாழ்வில் வளமும், நலமும் கூடும். வீட்டில் விருந்தினர் வருகை அதிகரிக்கும்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் விபத்துத் தாரையில் சஞ்சாரம் செய்வதால் போக்குவரத்தில் கவனம் தேவை. மின்சாதனங்களை, கணனி சாதனங்களை கையாளும்போது மிக்க கவனமுடன் கையாள்வது நலம்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் க்ஷேமத் தாரையில் சஞ்சாரம் செய்வதால் வீடு, மனை, பூமி என வாங்க இயலும். நீண்ட கால நோய்கள் விலகும். பெண்களின் வாழ்வில் வளமும் நலமும் சேரும். சரளமான பணப் புழக்கம் உண்டு.

**சித்திரை 1,2 பாதங்களில் பிறந்த வர்களுக்கு:** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் ஜென்ம தாரையில் சஞ்சாரம். இதனால் உடல் நலனில் கவனம் தேவை. சகோதரவழியில் சில சங்கடம் உண்டாக இடமுண்டு. இத்தருணத்தில் வீடு, மனை, பூமி வாங்குவதில் அவசரம் காட்ட வேண்டாம்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் சம்பத்துத் தாரையில் சஞ்சாரம் செய்வதால் சரளமான பணப்புழக்கம் உண்டு. திடீர் தனவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு மறைமுக வருவாய் கிட்டும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் விபத்துத் தாரையில் சஞ்சாரம் செய்வதால் போக்குவரத்தில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போது வேகத் தடைகளை கவனித்துச் செல்லவும். குறிப்பாக பணம் எடுத்துச் செல்லும் போது மிகவும் கவனம் தேவை.

## பரிகாரம்

உமது ராசிக்கு சனிபகவான் 10ல் வருகிறார். 5,6க்குரிய சனி பகவான் 10 ல் வருவதால் நல்லதும் கெட்டதும் சேர்ந்தே நிகழும். குருபகவான் 11,12,1,2 ஆகிய வீடுகளில் சஞ்சாரம். ராகு பகவான் 9,8,7,6 ஆகிய வீடுகளிலும், கேது பகவான் 3,2,1,12 ஆகிய வீடுகளிலும் சஞ்சாரம்.

பிரதி சனிக்கிழமை சனி பகவானை நீலோற்பவ மலரால் அர்ச்சித்து வணங்கவும். ‘‘ காகத் வஜாய வித்மகே கட்க ஹஸ்தாய தீமஹி தன்னோ மந்த பிரஜோதயாது” என்ற மந்திரத்தை தினசரி 108 முறை ஜெபிக்கவும். இயன்றளவு தான தருமம் செய்க.

**ஜோதிட மணி துரைராஜ்**

பிரதி வியாழன் தட்சிணாமூர்த்தியை மஞ்சள் நிற மலரால் அர்ச்சிக்கவும். நெய் தீபம் ஏற்றவும். பிரதோஷ வழிபாடு செய்க. சங்கட ஹர சதுர்த்தி அன்று விநாயகருக்கு மோதகம் படைப்பது நலம். (தொடரும்)

## ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

ஏற்றுமதிப் பொருட்களால் நாட்டின் வருமானம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாக மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

அந்த வகையில், இந்த வருடம் மார்ச் மாதத்திற்கான ஏற்றுமதிவருமானம் 3 கோடி 70 லட்சம் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் இதேகாலப்பகுதியில் பெறப்பட்ட ஏற்றுமதி வருமானத்திலும் பார்க்க இது 15சதவீத அதிகரிப்பாகும் எனவும் மத்திய வங்கி கூறியுள்ளது.

இதேவேளை, ஏற்றுமதி வருமானத துறைக்கு கைத்தொழில் துறையும் பெரும் பங்காற்றியுள்ளதாகவும் அதன பிரகாரம் ஆடை ஏற்றுமதியால் மாத்திரம் 21 கோடி சம்பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாயத்துறையால் பெறப்பட்ட ஏற்றுமதி வருமானம் 10 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது என்றும் தேயிலை வர்த்தகத்தின் ஏற்றுமதி வருமானம் பெருமளவு குறைந்ததே இதற்கான காரணம் என்றும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (உ-10)


## தரம் 09 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பரிசுகள் ரூபா 750/= 500/= 250/=
மற்றும் சான்றிதழ்களும்

விடயம் : ‘‘தாய் அன்பிற்கு நிகரேது”

சொற்கள்: 175-200 வரை

கட்டுரைகள் 31.05.2003 ற்கு முன்னதாக ‘‘மாணவர் கட்டுரைப் போட்டி” வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்

**கட்டுரைப் போட்டி இல-3**

மாணவர் முழுப் பெயர் :------------------------
பாடசாலை :------------------------
:------------------------
கற்கும் தரம் :------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------------
ஆசிரியர்

# புலிகளின் பிரேரணைக்குப் பதிலாக அரசாங்கம் புதிய யோசனை

## முன்வைத்திருப்பதாக பீரிஸ் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைக்குப் பதிலாக வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை நோக்காகக் கொண்டவிசேட அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் யோசனையை அரசாங்கம் முன்வைத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பேசுகையிலேயே பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் பேசுகையில், இத்தகைய பிரேரணை் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்காக நோர்வே விசேட சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் மற்றும் நோர்வேத் தூதுவர் ஹென்லெச்சட் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரேரணையின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு விரைவில் தீர்வு காண முடியும் என அரசு எதிர்பார்க்கின்றது.

இதே சமயம் எந்தவிதமான பிரேரணையாக இருந்தாலும் அது நாட்டின் சட்ட அமைப்புக்கு உட்பட்ட வகையிலேயே நடைமுறைக்கிடப்பட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாக வுள்ளது.

அதன் அடிப்படையிலேயே இந்த பிரேரணை தற்போது முன் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப்பிரேரணை தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்ட கடிதத்தை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் நோர்வே நாட்டு விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் கையளித்ததும் பின்னரே இது பற்றிய மேலதிக தகவல்களை அரசு வெளியிட முடியும் என்றார். (உ-10)

# சமாதானப் பேச்சுக்களை புலிகள் தொடர வேண்டும்

## ஆஸி.அமைச்சர் வேண்டுகோள்

(கொழும்பு)

இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகள் மீண்டும் தொடர வேண்டும் என்று அவுதிஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸ் சாண்டர் டவானா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேபோன்று அடுத்த மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிலும் புலிகள் கலந்து கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளமை குறித்தும், டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என அறிவித்துள்ளமை குறித்தும், அலெக்சாண்டர் டவானா கவலை வெளியிட்டுள்ளார். (தி)

# ஐஸ் தொழிற்சாலை புனரமைப்பு அனுமதி வழங்குவதில் இழுத்தடிப்பு

## வெகுஜன எழுச்சிக்குத் தயாராகிறது மீனவர் சமூகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகரில் அமைந்திருந்த ஐஸ்கட்டித் தொழிற்சாலையை மீளப்புனரமைத்து இயங்க வைப்பதற்கு அனுமதி வழங்குவதில் யாழ். மாவட்ட இராணுவத் தலைமையகம தொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்து வருவதாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டறவு சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுபற்றி மேலும் தவரட்ணம் கருத்துத் தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்தில் மீனவ மக்களுக்கு பெரும் நன்மை பயக்கக் கூடிய இத்தெழிற்சாலை தற்போது யுத்த அழிவுகளாலும், உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையினாலும் இயங்க முடியாது உள்ளது.

இத்தொழிற்சாலையை மீளப் புனரமைத்து இயங்கவைப்பது தொடர்பில் நாம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க புனர்வாழ்வு அமைச்சு அதற்கான நிதியை வழங்கியதுடன் பாதுகாப்பு அமைச்சு தொழிற்சாலையை பார்வையிடவும் மீள் புனரமைப்பு வேலைகளில் ஈடுபடவும் அனுமதியளித்தது.

ஆயினும் இதற்கு யாழ்.மாவட்ட இராணுவத் தலைமையகம் அனுமதிதராமையால் இப்பணி பின்னடைவைச்சந்தித்துள்ளது.

இவ்வாறு இழுத்தடிப்பு இராணுவத்தினரால் தொடரப்படுமானால் மீனவர் சமூகம் தம் இயல்பு வாழ்வுக்காக வெகுஜனப் போராட்டங்களில் குதிப்பதை தவிர வேறு வழியில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இதுதொடர்பாக அடுத்த வாரமளவில் இராணுவத் தளபதிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களுடன் கலந்தாலோசிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-4,43)

# பாதிக்கப்பட்ட மக்களுக்காக பிரார்த்தனையில் ஈடுபடுங்கள்

## நல்லை ஆதினமுதல்வர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் வேண்டியும் அவர்களின் இயல்பு வாழ்க்கை மீண்டும் ஏற்பட வேண்டியும் இந்து மக்கள் அனைவரும் ஒருவார காலம் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்மந்த பரமாச்சார்ய சுவாமிகள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்பகுதி மக்களின் சுபீட்ச வாழ்வுக்காக வீடுகள், ஆலயங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் அனைத்திலும் பிரார்த்தனையில் ஈடுபடுமாறும் அவர் கேட்டுள்ளார். (ந-5)

# மீளக் குடியமரும் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டனர்

(கிளிநொச்சி)

மன்னார் மாவட்டத்தில் யுத்த நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு-விடுதலைப்புலிகள்-இராணுவ அதிகாரிகளாகியோர் மீளக்குடியமரவுள்ள இடங்களுக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்துள்ளனர்.

மன்னாரிலுள்ள உயிலங்குளம், முருங்கன், கேதீஸ்வரம், நானாட்டான் ஆகிய பகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் நேரில் சென்ற இவ் முத்தரப்பு பிரதிநிதிகள், மீளக்குடியமரக் கூடிய சூழ் நிலைகள் தொடர்பாக தகவல்களை திரட்டியுள்ளனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் மன்னார் மாவட்ட அரசியல் துறை துணைப்பெறுப்பாளர் மூர்த்தி, இராணுவத்தரப்பில் மன்னார் மாவட்ட சிவில் இணைப்பதிகாரி லெப்டினன்ட் கோணல் சொப்ரிக்கோ மற்றும் கண்காணிப்புகுழு அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (ந-5)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆஸி. 4 இலட்சம் டொலர் உதவி

(கொழும்பு)

வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனர் வாழ்வு நடவடிக்கைகளுக்காக அவுஸதிரேலிய அரசாங்கம் 4இலட்சம அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

இப்பணம் யுனிசெவ் நிறுவனத்தின் ஊடாக வழங்கப்படும் என இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள அவுஸதிரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவானா தெரிவித்துள்ளார்.

இந் நிதியிலிருந்து இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள், கட்டடங்கள் புனரமைக்கப்படுவதுடன பாதிக்கப்பட்ட 8 ஆயிரம் மாணவர்களின் கல்வி அபிவிருத்தித்திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன. (தி)

# வடமாகாணக் காரியாலயம் வாடிக்கையாளர் நல மேம்பாட்டுக்கு வழிவகுக்கும்

## இலங்கை வங்கி பொது முகாமையாளர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தின் புனர்வாழ்வு, அபிவிருத்தி மற்றும் வங்கி வாடிக்கையாளர்களின் நலன்களை மேம்படுத்தும் பல்வேறு விதமான புதிய திட்டங்களை இலங்கை வங்கி இன்று திறந்து வைத்துள்ள வட மாகாணக் காரியாலயம் மூலம் அமுல்படுத்தவுள்ளது.

இலங்கை வங்கியின் பொது முகாமையாளரான எஸ். என். பி. பள்ளிகென நேற்று யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி வளாகத்தில் வட மாகாண காரியாலயத்தை நாடா வெட்டித் திறந்து வைத்து உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டமுகாமையாளர் சி. நடராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இந்து, கிறிஸ்தவ, பௌத்த,இஸ்லாமிய மதப் பெரியார்கள் ஆசியுரைகளை வழங்கினர்.

இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

இது வரைகாலமும் கொழும்பில் இயங்கி வந்துள்ள இவ் அலுவலகத்தினை யாழ்ப்பாணத்துக்கு மாற்றியமை இப்பகுதியில் இருக்கின்ற வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனங்கள், வங்கி ஊழியர்களுக்கு பல் வகைப்பட்ட வசதிகளையும் உதவிகளையும் வழங்குவதற்கான முதல் படியாகும்.

அத்துடன் இவ்வலுவலகம் மூலம் யாழ்ப்பாணத்து வணிகர் பெருமக்களுக்கு இலகுகடன், குறுங்கால கடன்,மேலதிக பற்று போன்றவற்றினை உடனுக்குடன் வழங்க முடியும் என நான் நம்புகிறேன் என்றார்.

மேலும், கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது இம்மாவட்டத்தில் இருந்த வணிகர்களுக்கு பலரும் நன்மைகளை வழங்கியிருந்தோம். பிரச்சினைகள் துன்பங்கள் எனக்கூறிக் கொண்டு நாம் யாழ்ப்பாணத்தில் இருந்து ஓடவில்லை.எமது பணிகளை நாம் இனி வருங்காலத்தில் மென்மேலும் அபிவிருத்தி செய்வோம். வணிகர்கள்,பொதுமக்களின் ஒத்துழைப்புகள் தொடர்ந்தும் இருக்கும் என நம்புகின்றேன் என்று குறிப்பிட்டார்.

யாழ்.அதிபர் செ.பத்மநாதன் அங்கு உரையாற்றும்போது,

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மீளக்குடியமர வருகின்ற குடும்பங்களின் சமூக, பொருளாதார வாழ்வியல் முன்னேற்றங்களுக்கு உதவக்கூடிய புதிய திட்டங்களை இலங்கை வங்கி யாழ்.மாவட்டத்துக்கு விசேடமாக அறிமுகப்படுத்த வேண்டும். அத்திட்டங்கள் நெகிழ்ச்சித்தன்மை கொண்டதாகவும் இருத்தல் அவசியம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை 40 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இன்னமும் 25ஆயிரம் குடும்பங்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விதம் வருகின்ற மக்களின் அபிவிருத்திக்கு உதவுவதில் அரசாங்கம், அரச அதிகாரிகள், வங்கிகள் யாவரும் இணைந்து உதவி செய்ய வேண்டியது மிக அத்தியாவசியமாகப்படுகின்றது என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தமது உரையில் ,

இலங்கை வங்கி தனது சேவைகளை விஸ்தரிக்கும் நடவடிக்கையாக அச்சுவேலி, கொடிகாமம், சங்கானை ஆகிய பகுதிகளில் புதிய கிளைகளை ஆரம்பிக்க வேண்டும்.இலங்கை வங்கியில் அடகு வைத்தவர்களில் பல நகைகள் இன்னமும் மீளப்பெறப் படாமல் இருக்கின்றன. இது ஒரு பிரச்சினைக்குரிய விடயமாகும். இது யாழ். மக்களது சொத்து. இன் நகைகள் இன்னமும் மத்திய வங்கியில் இருக்கின்றன. இவற்றுக்குரியவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையால் அவற்றினை உரியவர்களுக்கு வழங்குவது பெரும்பிரச்சினையாகப்படுகின்றது. எனவே இது தொடர்பான உரிய தீர்மானங்களை எடுத்து இப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்.

இன்று இலங்கை வங்கியில் சில கிளைகளில் கணனிகள் அறிமுகப்படுத்தப்பட்டதால் ஊழியர்கள் குறைப்பு இடம் பெற்றுள்ளது. மற்றும் வங்கிகளின் கரும பீடத்தில் இளம் ஊழியர்கள் கடமையில் அமர்த்தப்படவேண்டும் எனக்கூறிப்பிட்டார். (உ-77,4)

# வலி.கிழக்கு பொது அமைப்புகள் இன்றுமறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நிலாவரை மற்றும் நவக்கிரிப் பகுதிகளில் இராணுவம் முகாம் அமைக்க மேற்கொண்டு வரும் முயற்சியைக் கண்டித்து வலி-கிழக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் இன்று காலை மறியற் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

பொது மக்களுக்குச் சொந்தமான மேற்படி காணிகளில் முகாம அமைப்பதற்கு படையினர் மேற்கொண்டு வரும் இம்முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை 9மணிக்கு நடைபெறவுள்ள இந்த மறியற் போராட்டத்தில் வலி. கிழக்குப் பொதுமக்களை அணி திரளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (த)

# யாழ்.குடாநாடு முழுவதும் தொடர் மின் விநியோகம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்திற்கு மின்சாரத்தை வழங்கி வரும் 'கூல்எயர்' தனியார் நிறுவனத்திற்கு மின் உற்பத்தி உபகரணங்களை புனரமைப்பதற்கென 40லட்சம் ரூபாவை புனர்வாழ்வு அமைச்சு கடனாக வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம், யாழ்.மாவட்டத்திற்கான மின்விநியோகம் 12மெகா வோட்ஸ் ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 'கூல்எயர்' நிறுவனம் 18மெகா வோட்ஸ் மின்சாரத்தை வடபகுதிக்கு வழங்கி வந்தது. யுத்தம் காரணமாக உபகரணங்கள் சேதமடைந்தமை குறித்து அண்மையில் புனர்வாழ்வு அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போது இவ் உபகரணங்களை திருத்துவதற்காக 40லட்சம்ரூபாவை 2வருடத்திற்குள் மீளச் செலுத்தும் வகையில் கடனாக வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம் யாழ். குடாநாடு முழுவதும் தொடர்ச்சியான மின்விநியோகத்தை வழங்க முடியும் என மேற்படி நிறுவனம் தெரிவித்துள்ளது. (உ-10)

# சமுர்த்திக் கொடி விற்பனை வருமானம் சமூகப் பாதுகாப்புக்கு

## சமுர்த்தி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

இவ்வாண்டு சமுர்த்திக்கொடி விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை சிறுவர், பெண்கள் மற்றும ஊனமுற்றவர்களின் நலனுக்காக பயன்படுத்தப்போவதாக சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 31ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச புகைப்பிடிப்பதற்கு எதிரான தினத்தில் இருந்து ஒரு வாரத்திற்கு இக்கொடித்தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சமுர்த்திக் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை அமைச்சின் கீழ் கொண்டு வராமல் அப்பணம் அவ்வப் பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் சமூக பாதுகாப்பு நிதியாக பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய பிரதேச செயலகங்கள் தோறும் ஊனமுற்ற 5பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பொருளாதார ரீதியான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த ஆண்டு சமுர்த்திக்கொடி விற்பனை மூலம் 182 லட்சம் ரூபா வருமானமாக கிடைத்ததாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# இரண்டரை இலட்சம் ஈராக்கியருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம்

## ஐ.நா. அமுல்படுத்தியது

(பக்தாத்)

2 லட்சத்து 50 ஆயிரம் ஈராக்கியருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தை ஐக்கிய நாடுகள் சபை நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தியுள்ளது.

ஈராக்கில் அடிப்படை வசதிகள் சீர் குலைந்துள்ளதுடன், வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துவிட்டதை அடுத்து அங்கு நிலைமைகளை சீர்ப்படுத்தும் முயற்சியாகவே ஐக்கிய நாடுகள் சபை இத்திட்டத்தை உடனடியாகச் செயற்படுத்தியுள்ளது.

இதேசமயம், போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈராக்கில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தவும், மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும், வன்செயல்களால் பாதிக்கப்பட்ட ஈராக் மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதில் ஐக்கிய நாடுகள் கடும் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் கையிருப்பிலுள்ள நிதியினைக் கொண்டு தற்போதுள்ள நிலைமைகளை ஒருவாறு சமாளித்து வருவதாகவும் மேற்குறித்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, ஈராக் சிறுவர்கள் ஊட்டச்சத்துக் குறைந்து காணப்படுவதாக ஐக்கிய நாடுகளிற்கான குழந்தைகள் நிதியம் கவலை தெரிவித்துள்ளதுடன், இதனை நிவிர்த்திக்க அடுத்த மாதம் முதல் ஈராக் முழுவதும் உணவு விநியோகத்தை மேற்கொள்ள உலக உணவுத் திட்டம் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, ஈராக் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் குறைத்து, அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கு அமெரிக்க அதிகாரிகளுடன் ஐ.நா. அதிகாரிகள் ஒப்பந்தமொன்றையும் செய்து கொண்டுள்ளனர். (உ-2)

## இஸ்ரேல் அதிபரை பரீட்சிக்க துயாராகிறார் பலஸ்தீனப் பிரதமர்

(காஸா)

மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை இஸ்ரேல் அமைச்சரவை அங்கீகரித்துள்ளதை அடுத்து, அந்த நாடு எந்தளவிற்கு அர்ப்பணிப்புடன் சமாதானத் திட்டத்தை செயற்படுத்த முன்வருகின்றது என்பதைப் பரீட்சிக்கவுள்ளதாக பலஸ்தீனப் பிரதமர் மொஹமட் அப்பாஸ் கூறியுள்ளார்.

பலஸ்தீனப் பிரதமராக கடந்த மாதம் பதவியேற்ற பின்னர் இஸ்ரேல் பத்திரிகை ஒன்றிற்கு முதல் தடவையாக அளித்த பேட்டியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை, பலஸ்தீனப் போராளிகளைத் துன்புறுத்துவதையும், கொலை செய்வதையும் இஸ்ரேல் நிறுத்துவதோடு, பலஸ்தீன மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் கைவிட வேண்டும் என்றும் அவர் இஸ்ரேலைக் கோரியுள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் எத்தகையவர் என்பதை கணிப்பதற்கு விரும்பவில்லை என்று கூறிய அப்பாஸ், சமாதானத் திட்டத்தை செயற்படுத்துவதைப் பொறுத்தே அவர் மீது நம்பிக்கை வைக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார். (உ-9)

## ஆர்ஜென்டீனா புதிய அதிபராக நெஸ்டர் கிர்ச்னர் பதவியேற்பு

(ப்பூனஸ் அயர்ஸ்)

ஆர்ஜென்டீனாவின் புதிய அதிபராக நெஸ்டர் கிர்ச்னர் நேற்று முன்தினம் பதவியேற்றுள்ளார்.

இப்பதவியேற்பு வைபவத்தில் கியூபா நாட்டுத் தலைவர் பிடல் காஸ்ரோ, வெனிசுலா ஜனாதிபதி ஹுயுகோ சாவேஸ் உட்பட 12 நாடுகளின் தலைவர்கள் பங்கு கொண்டனர்.

கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள தனது நாட்டை வளமான பாதைக்கு திசை திருப்புவேன் என்றும், தேச நலனில் அக்கறையுள்ள கொள்கையை கடைப்பிடிப்பேன் என்றும் உறுதியளித்து ஜனாதிபதி பதவியை நெஸ்டர் கிர்ச்னர் ஏற்றுக்கொண்டார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த மேற்படி ஜனாதிபதித் தேர்தலில் எவரும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை என்பதால் இரண்டாம் சுற்று வாக்கெடுப்பு நடத்த தேர்தல் ஆணையத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி ஹாலோஸ் மென்தான் இரண்டாம் சுற்று வாக்கெடுப்பிலிருந்து விலகிக் கொள்ளப்போவதாக அறிவித்திருந்ததை அடுத்தே நெஸ்டர் கிர்ச்னர் ஜனாதிபதியாகும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-2)

## பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தும் சூழ்நிலை விரைவில் உருவாகும்

### இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நம்பிக்கை

(புதுடில்லி)



பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தும் சூழ்நிலை மிக விரைவில் உருவாகும் என தான் நம்புவதாக இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கூறியுள்ளார்.

வெளிநாடுகளிற்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ள இவர், பயணத்திற்கு முன்னதாக செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை உருவாக எல்லை தாண்டிய பயங்கரவாதமே முட்டுக்கட்டையாக உள்ளது என்று குறிப்பிட்ட வாஜ்பாய், இந்த முட்டுக்கட்டைகள் நீங்கும் காலம் அண்மித்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைக்கு விதித்து வந்த முன்நிபந்தனைகளை இந்தியா தளர்த்திவிட்டதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந் சிங்கா நேற்று முன்தினம் அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-2)

## இந்தியாவுடனான சமாதானப் பேச்சில் முஷாரப் பங்கேற்க மாட்டார்

(இஸ்லாமபாத்)



இந்திய-பாகிஸ்தானிற்கிடையிலான உயர் மட்ட சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றால் அதில் பாகிஸ்தான் தரப்பில் பிரதமர் மிர் ஜவருலால் கான் ஜமாலி மட்டுமே பங்கெடுப்பார் என பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளிக்கையிலேயே முஷாரப் இவ்வாறு கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் முஷாரப்பைச் சந்திக்க மாட்டேன் என்று முன்னொரு சந்தர்ப்பத்தில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கூறியதையும் முஷாரப் நினைவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை இரவு இஸ்லாமபாத்தில் அரசியல் வாதிகள், தொழிலதிபர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்ட பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய பாகிஸ்தான் அதிபர்,

இந்திய-பாகிஸ்தானிற்கிடையிலான அமைதி நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கத் தான் விரும்பவில்லை என்றும் தெற்காசியாவை அணு ஆயுதமற்ற பகுதியாக மாற்ற வேண்டும் என்ற திட்டத்தை இந்தியாவிடம் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பாக இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்தவும் தயாராக இருப்பதாகவும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## அல்ஜீரியாவில் மீண்டும் பூமியதிர்ச்சி; மூவர் பலி

(அல்ஜியர்ஸ்)

மற்றுமொரு சிறிய அளவிலான பூமியதிர்ச்சி நேற்று முன்தினம் அல்ஜீரியாவில் ஏற்பட்டுள்ளது.

ஷிமோறி, புல்மடேஸ் ஆகிய நகரங்களில் ஏற்பட்ட இந்தப் பூமியதிர்ச்சியினால் மூவர் பலியாகியுள்ளதோடு சுமார் 200 பேர் வரை காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சில கட்டடங்களும் தரைமட்டமாகியுள்ளன.

கடந்தவாரம் அல்ஜீரியாவில் நிகழ்ந்த பாரிய பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து நேற்று முன்தினம் ஏற்பட்ட பூமியதிர்ச்சி 5.8 ரிச்சர்ட் அளவைக் கொண்டதாகப் பதியப்பட்டுள்ளது.

இதேவேளை, அல்ஜீரியாவில் கடந்தவாரம் ஏற்பட்ட பாரிய பூமியதிர்ச்சியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமையும்,

கட்டட இடிபாடுகளுக்குள் இன்னும் பலரது சடலங்கள் இருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக மீட்புப் பணியாளர்கள் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-9)



எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த 50 ஆண்டுகள் நிறைவையொட்டி காத்மண்டுவில் நடைபெற்ற விழாவில் இத்தாலியைச் சேர்ந்த ரீன்ஹோல்ட் மெஸ்னெர் உடன் அவருடைய மனைவி முதன் முதலாக ஒட்சிசன் இல்லாமல் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிச் சாதனை படைத்த இருவரையும் படத்தில் காணலாம்.

## காவிரி நதிநீர் கண்காணிப்பு குழுக்கூட்டம்

(புதுடில்லி)

காவிரி நதி நீர் கண்காணிப்புக் குழுவின் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதி புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

மத்திய நீர்வளத்துறை அமைச்சரின் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் தமிழக தலைமைச் செயலாளர், பொதுப் பணித்துறை மற்றும் விவசாயத்துறைச் செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, கேரளம், பாண்டிச்சேரி, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் முக்கிய பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கூட்டத்தில் வரட்சிக் காலத்தில் காவிரி நதி நீரை பங்கிடுவது குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுவதுடன், கர்நாடக அரசு வரட்சிக் காலத்தில் தர மறுத்த தண்ணீரை மீண்டும் தரவேண்டும் என்று தமிழக அரசு கோரியிருந்தமை குறித்தும் விவாதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## ஈராக் மீதான பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்படும்

### அமெரிக்காவும் அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை முற்றுமுழுதாக நீக்கவுள்ளதாக அமெரிக்காவின் திறைசேரிச் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஈராக் மீதான சர்வதேச பொருளாதாரத் தடையை தளர்த்த ஐக்கிய நாடுகள் சபை கடந்த வாரம் முன்வந்ததை அடுத்தே அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுக்கவுள்ளது.

வர்த்தக நாடுகளுடன் ஈராக் மக்களை தொடர்பு கொள்ள வைப்பதற்கு புஷ் நிர்வாகம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ஜோன்ஸ்னோ தெரிவித்துள்ளார்.

விடுதலை பெற்றுள்ள ஈராக் இதன்மூலமாக புதிய சகாப்தத்தை ஆரம்பிக்கும் என்றும் ஸ்னோ கூறியுள்ளார். (உ-9)

## கூடியிருந்த பக்தர்கள் மீது இராட்சத இராட்டினம் வீழ்ந்தது

### எண்மர் பலி; 25 பேர் படுகாயம்

(புதுடில்லி)

தமிழ் நாட்டிலுள்ள அமராவதி ஆற்றின் கரையில் இராட்சத இராட்டினம் ஒன்று விழுந்ததில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன், 25 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் கோவில் திருவிழாவில் கூடியிருந்த பக்தர்கள் மீது இந்த இராட்சத இராட்டினம் வீழ்ந்துள்ளது.

கடும் சூறாவளி மற்றும் மழையினால் இந்த இராட்டினம் வீழ்ந்திருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இறந்தவர்களில் இரு பெண்கள் மற்றும் இரு குழந்தைகளும் அடங்குகின்றனர். (உ-9)

## இன்னும் ஒரு தகவல்

# கல்விக்கு கரையில்லை!

" என்ன சார்! எப்படி இருக்கிறீர்கள்?" "என்று கேட்டுக் கொண்டே வந்தார் என் நண்பர்." வாருங்கள் உட்காருங்கள், ஏது இந்தப் பக்கம அதுவும் இந்த நேரத்திலே என்றேன். உங்களிடம் வந்தால் ஏதாவது சொல்லுவீரகள் கேட்டுக் கொள்ளலாம் என்று நினைத்து வந்தேன் என்றார். பெரியவர்கள் எல்லோரும் இப்படித்தான் இருந்திருக்கிறார்கள் சார்! என்றேன். எப்படி? என்றார். " எத்தனை நாள வாழ்வேனோ அத்தனை நாளும் ஏதாவது கற்றுக் கொண்டே இருப்பேன்!" என்று இராமக் கிருஸ்ண பரமஹம்சர் சொல்லி இருக்கிறார். இதை ஞாபகப் படுத்துவது மாதிரி இராம தீர்த்தருக்கு ஓர் அனுபவம் ஏற்பட்டது என்றேன். விபரமாகச் சொல்லுங்கள் என்றார். சொல்ல ஆரம்பித்தேன்.

சுவாமி இராமதீர்த்தர் ஒரு தடவை ஜப்பானுக்கு கப்பலில் போய்க்கொண்டிருந்தார். அதே கப்பலில் இன்னொரு ஜப்பான் காரரும் சென்று கொண்டிருந்தார். அந்த ஜப்பான் காரருக்கு 90வயதுக்கு மேல் இருக்கும். மிகவும் வயதானவர். கை, கால் எல்லாம் ஒரே நடுக்கம். அதன் இஷ்டத்திற்கு ஆடிக் கொண்டிருந்தது. உடம்பும் மிகவும் பலவீனமாகத் தெரிந்தது. வயதாகி விட்டால் அப்படித்தானே! அவர் பேசாமல் ஒரு மூலையில் படுத்துக் கொண்டு வரவேண்டியது தானே! ஆனால் அவர் அப்படி செய்யவில்லை.

என்ன பண்ணிக் கொண்டு வந்தார் தெரியுமா? ஒரு மொத்தமான கண்ணாடியைப் போட்டுக்கொண்டார். சீன மொழியிலே ஏதோ ஒரு பாடத்தை திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டே எழுதிக் கொண்டிருந்தார். கையோ நடுங்கிக் கொண்டிருக்கிறது. பார்வையோ சரியில்லை. இந் நிலைமையில் இது அவருக்குத் தேவையா? சுவாமி இராம தீர்த்தருக்கு இது கொஞ்சம் வித்தியாசமாகத் தெரிந்தது. ஆச்சரியப்பட்டார்.

"பெரியவரே! இவ்வளவு தீவிரமாக என்னவோ செய்து கொண்டிருக்கிறீரகளே... என்ன அது என்று கேட்டார். சீன மொழியை கற்றுக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது. எழுதிப் பார்த்தால் மொழிப் பயிற்சி கிடைக்குமே! அதனால் அந்த மொழியில் எழுதிப் பழகுகிறேன் என்றார்." "மற்ற மொழிகளை விட அந்த மொழி மிகவும் கடினமானது என்று கேள்விப் பட்டேன்" என்றார் இவர். கடினமானது என்பதற்காக அதைப் பயிலக் கூடாது என்பது இல்லையே என்றார் அந்தப் பெரியவர்.

அந்த மொழியை முழுவதுமாகப் கற்றுக் கொள்வது என்றால் வருஷக் கணக்கில் ஆகுமே! உங்களுக்கோ கையும் காலும் சொன்னபடி கேட்கமாட்டேன் என்கிறதே! என்றார் சுவாமிஜி. "அப்படி என்றால் நான் சீன மொழியை கற்றுக் கொள்கின்ற முயற்சியை கைவிட்டு விடவேண்டும் என்கிறீரகளா?" என்றார் பெரியுவர். "நான் அப்படி எல்லாம் உங்களுக்கு யோசனை சொல்லலாமா? ஆனால் ஒன்று மட்டும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்" என்றார் சுவாமிஜி. என்ன? என்று கேட்டார் அவர். "இப்படி எல்லாம் செய்ய வேண்டும் என்று உங்களை தூண்டியது எது என்பதை மட்டும் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்" என்றார்.

காகிதத்தை மடித்து ஒரு பக்கமாக வைத்துவிட்டு அந்தப் பெரியர் "நான் உயிரோடு இருக்கின்ற வரைக்கும் ஒன்று இல்லை என்றால் ஒன்று என்று ஏதாவது புதிதாக ஒன்றைக் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். இது தான் என் ஆசை" என்று சொன்னார். "ஆனால் உங்கள் உடல் நிலை புதிதாகக் கற்றுக் கொள்வதற்கான முயற்சிக்கு சாதகமாக இல்லைப் போல் இருக்கிறதே என்றார்" "அட வாழ்க்கை என்பது தான் என்ன? ஆதி அந்தம் இல்லாத, தங்கு தடை இல்லாத ஒரு பிரவாகம் அது. ஓயாமல் பிரவகிக்கிற வாழ்க்கை நிரோட்டத்தினூடே ஒவ்வொரு கணமும் புதிதாக ஏதாவதொன்றை அறிய, கண்டுபிடிக்க ஒரு சிந்தனையில் லயிக்க வாய்ப்புக் கிடைத்தால் அதைக் கை நழுவ விடக்கூடாது" என்றார் அந்த முதியவர்.

இப்போது தான் சுவாமி இராமதீர்த்தருக்கு இராம கிருஸ்ணர் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. "எத்தனை நாள் வாழ்ந் தேனோ அத்தனை நாளும் ஏதாவது கற்றுக் கொண்டே இருப்பேன்" என்று சொன்னாரே அது! இப்படி நான் சொல்லி முடித்ததும் எதிரிலிருந்த என் நண்பர் "எனக்குங் கூட அப்படித்தான் புதிதுபுதிதாக ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசை. அது தான் உங்களிடம் வந்தேன்" என்று சொன்னார் எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. இன்றைக்கு என்னிடம் வந்ததனால் புதிதாக என்ன தெரிந்து கொண்டீர்கள் என்று கேட்டேன். "புதிதாக எதையாவது தெரிந்துகொள்ள வேண் டும் என்றால் இனி மேல் உங்களைத் தேடி வரக்கூடாது என்று தெரிந்து கொண்டேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

### யுத்தத்தால் பாதிப்புற்ற பிரதேசங்களில்

# நெருக்கடிக்குள்ளாகும் சிறுவர்கள் குறித்த முறைப்பாடுகள் குறைந்துள்ளன

### சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதிநிதி தகவல்

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சிறுவர்களை நெருக்கடிகளுக்குள் உட்படுத்துவது தொடர்பாக கிடைத்து வந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை தற்போது குறைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நேர் சைவான் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்கும் நோக்கில் கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள இடைத்தங்கல் நிலையத்திற்கான புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

சிறுவர்கள் நெருக்கடிக்குள்ளாகும் இத்தகைய நிலைமை முற்றாக நீங்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது எனவே, இதற்காக தம்மால் இயன்ற சகல ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் வழங்கும் என்றார்.

இதேவேளை, மேற்படி நிலையம் அமைக்கும் பணி இன்னும் 4 மாதங்களுக்குள் பூர்த்தி அடைந்து விடும் என இந் நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ். தங்கன் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் மூலமாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கை விடுதலைப்புலிகளுக்கு இருக்கிறது.

எனவே தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான பேச்சுவார்த்தையில் இருந்து தற்காலிகமாக இடைவிலகி இருப்பதை வைத்துக் கொண்டு முற்றுமுழுதாக சமாதானப் பேச்சில் இருந்து பின் வாங்கி விட்டார்கள் என எவரும் கருதக் கூடாது.

அத்துடன், தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகள் ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும் என்றார்.

(உ-10)

---

# அரசு-புலிகள் பேச்சை ஆரம்பிக்க அழுத்தம் கொடுக்க வேண்டும்

### பௌத்த மகாநாயக்கர்கள் ஜப்பானிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும்படி ஜப்பானிய அரசாங்கம் வலியுறுத்த வேண்டும் என்று, சங்கைக்குரிய பௌத்தமகாநாயகர்கள், கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதுவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது விடயம் குறித்து, பௌத்த மகாபீடத்தைச் சேர்ந்த 3 மகாநாயக்கர்கள் கூட்டாக ஜப்பானியத் தூதருக்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, டோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டிற்கு விடுதலைப்புலிகளை அனுமதிக்கக் கூடாது எனக் கோரி பௌத்த பிக்குகள் முன்னணியினர், ஜப்பான் தூதரகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியதும், முடிவில் இது விடயமாக ஜப்பானிய பிரதமர் ஜூனிசிரோகொய்சுமிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.(இ)

---

## இராசி பலன்

### 29. 05. 2003

(வைகாசி 15, வியாழன்)

திரயோதசி மு.ப 6.27 வரை
பரணி மு.இ. 9.01 வரை
இராகுகாலம் 1.22 - 2.52
சுபநேரம் 7.22 - 8.52
அக்கினி நாள் முடிவு

**மேடம்**
புதிய பொருள் சேர்க்கை, சிநேகிதர் உதவி, ஆழ்ந்த சிந்தை, காரிய அனுகூலம்

**இடபம்**
பிதா சிந்தை, உறவினர் மனஸ்தாபம், காரிய தாமதம், சுபசெலவு.

**மிதுனம்**
பெருமையடைதல், தொழில் விருத்தி, தெய்வ அனுகூலம், காரிய சிந்தை

**கடகம்**
சுபநிகழ்ச்சி, கடினமுயற்சி, அதிகாரம், பிறர் உதவி

**சிங்கம்**
ஆன்றோரால் மதிக்கப்படுதல், புதிய திட்டமிடல், உடல் உழைப்பு, இடமாற்றம்

**கன்னி**
வாகன பயம், உறவினர் வெறுப்பு, எதிர்பாராத நன்மை, காரிய தடங்கல்

**துலாம்**
குதூகலம், திடீர் பயணம், குடும்ப சுகம், காரிய அனுகூலம்

**விருச்சிகம்**
ஆரோக்கியம், செய்தொழில் விருத்தி, உறவினர் வருகை, தனவரவு

**தனுசு**
மனச் சஞ்சலம், திடீர் நன்மை, புத்திரரால் கவலை, பிரயாண தாமதம்

**மகரம்**
ரோக பயம், அமைதிக் குறைவு, குடும்ப சுகம், மாதா சுகம்

**கும்பம்**
போசனசுகம், கூட்டு முயற்சி, இனிய சம்பவம், உறவினர் கலந்துரையாடல்

**மீனம்**
கௌரவக் குறைவு, காரிய தாமதம், செலவு அதிகம், விவாதம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

---

### சிரான் உபகுழுக்களில்

# முஸ்லிம் பிரதிநிதித்துவம் இன்னும் இல்லை

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகளின் தீர்மானங்களுக்கு அமைவாக கிழக்கு மாகாண உப குழுக்களில் முஸ்லிம் பிரதிநிதிகள் இதுவரை இணைக்கப்படாமையால் உப குழுக்கூட்டங்களில் முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், முஸ்லிம் பகுதிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களை சிரான் அமைப்பிடம் சமர்பிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், இதன் கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் முஸ்லிம் பகுதி நிதிகள் புறக்கணிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைப்பதற்கென உருவாக்கப்பட்ட சிரான் அமைப்பின் உப குழுக்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகள் தலா மூவர் அங்கம் வகிக்கின்றனர்.

அரச தரப்பு பிரதிநிதிகள் மூன்று பேரில் குறித்த மாவட்டங்களின் அரச அதிபர்கள் அக் குழுவில் தலைவராக செயற்படுவதுடன், முஸ்லிம் தரப்பு அரசாங்க அதிகாரியும் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

இவ் உப குழுக்களில் ஏனைய அதிகாரிகள் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்ட போதிலும், முஸ்லிம் தரப்பு பிரதிநிதி நியமிக்கப்படாததால் அவர்கள் சிரான் உபகுழுக் கூட்டங்களில் பங்குபற்ற முடியாதுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாவட்ட் மட்டத்திலான சிரான் உப குழுக்கள் ஏற்கனவே அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அங்கிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.(தி)

---

# மாகாண சபையில் அமளிதுமளி கூட்டம் இடைநிறுத்தம்

### கலகம் அடக்கும் பொலிஸார் வரவழைப்பு

(கொழும்பு)

வடமத்திய மாகாண சபைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட அமளிதுமளி காரணமாக சபையின் கூட்டம் இடைநிறுத்தப்பட்டது.

மாகாண முதலமைச்சருடன் தொடர்புபட்ட காடையர் குழுவொன்று அமர்வுகள் நடைபெறும் இடத்திற்குப பிரவேசிக்க இருப்பதாக தமக்கு தகவல் கிடைத்ததாக மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சி. அபயசிங்க அங்கு தெரிவித்தார்.

அவர்களை வெளியேற்றுவதற்கான எதுவித முன் நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் தவிசாளர் மீது குற்றச் சாட்டுக்களை சுமத்தினார்.

இதனைத் தொடர்ந்து, மாகாண சபையின் தலைவர் அரசியல் யாப்புக்கு முரணான வகையில் நடந்து கொள்கிறார் என எதிர்க்கட்சித் தலைவர் கோஷம் எழுப்பியபோது, ஏனைய உறுப்பினர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

இதனை அடுத்து, மாகாணசபைக் கூட்டத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையை கட்டுப்படுத்த, அவ் இடத்திற்கு கலகம் அடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். (தி)

---

# மகாபொல கொடுப்பனவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

உயர் கல்வி அமைச்சின் புலமைப் பரிசில் திட்டத்திற்கமைய 2002-2003 கல்வி ஆண்டிற்கான மகாபொல கொடுப்பனவு சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 31ம் திகதி 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் அமைச்சர் தி. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மகாபொல பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமக்கான கடிதங்களை யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளரிடம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(உ-4)

வழங்குவ தூள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று
– குறள்

வலம்புரி

## ஜனாதிபதி தந்த இன்ப அதிர்ச்சி

உயர்பாதுகாப்பு வலயத்தில் பலாலி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்வதற்குத் தமக்கு ஆட்சேபனைஇல்லையென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். அமைச்சர் மகேஸ்வரன் நேற்று முன்தினம் அவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இவ்வறிவித்தல் இன்ப அதிர்ச்சியைத் தருகிறது. இலங்கையின் அரசியல் யாப்பில் நிறைவேற்று ஜனாதிபதியே நாட்டின் முப்படைத் தளகர்த்தா. முப்படைகளையும் கட்டுப்படுத்தும் அதியுயர் பதவியைக் கொண்டுள்ள ஜனாதிபதிக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியிருப்பதில் ஆட்சேபனை இல்லை என்றால்,அதற்கு மேலால் எந்தத்தடையும் இருக்கமுடியாது.

ஆனால், உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதால் அப்பகுதி மக்கள் இன்னமும் அகதி வாழ்க்கை நடத்துவது தொடர்கதையாகவே யுள்ளது.

அதாவது ஜனாதிபதியின் கூற்றுக்கும், மக்களின் வாழ்வியலுககும் இடையில் இருக்கக்கூடிய வேறுபாட்டிற்குக் காரணம் என்ன என்பதே இப்போது எழுகின்ற கோள்வியாகும்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமர்த்துங்கள் எனப் பொதுஅமைப்புக்கள் கோரிக்கை வைத்ததும், ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதும் பழையகதை. இது தொடர்பாக ஜனாதிபதிக்கும் மகஜர்கள் அனுப்பப்பட்டன. ஆனால்,அது விடயத்தில் ஜனாதிபதி எந்தவித கருத்தையும் முன்வைக்கவில்லை

அதே நேரம் உயர்பாதுகாப்புவலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவதாக இருந்தால், விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும் என்ற கோரிக்கையை யாழ். குடா நாட்டு இராணுவத்தளபதி சரத்பொன்சேகா முன்வைத்திருந்தார். குடாநாட்டு தளபதியின் இக்கோரிக்கை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்ததோடு சமாதான முயற்சிக்கும் பங்கத்தை எற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தையும் உண்டு பண்ணியிருந்தது.

அப்போது சரத்பொன்சேகாவின் கருத்து நியாயமானது,அதனை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி கோஷம் எழுப்பியது. உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்த வேண்டுமெனக் கேட்டபோது விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் எனவிதிக்கப்பட்ட நிபந்தனையை ஆதரித்த ஜனாதிபதி இப்போது உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியிருப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை எனத் தெரிவித்திருப்பது, அதிர்ச்சியானதாக இருப்பினும் அது நடைமுறைப்படுத்தப்படுமாயின் ஜனாதிபதிக்கு தமிழ் மக்கள் நன்றியுடையவர்களாக இருப்பர்.

# பல்கலைக்கழக பாட நெறிகளில் மனைப்பொருளியல்

# கலை, விஞ்ஞானப் பிரிவினர்களுக்கு உகந்த நெறி

பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று உள்வரும் மாணவர்கள் காலத்திற்கேற்ப மாறி வரும் அனுமதி முறைகளால் பல சிக்கல்களை எதிர் நோக்குகிறார்கள். இத்தகைய மாற்றங்களால் அனுமதிக்கப்படும் மாணவர்களின் அளவும் பாதிக்கப்படுகிறது. கலை,வர்த்தகம்,விஞ்ஞானம்,விவசாய விஞ்ஞானம், மருத்துவம்,பொறியியல் என பலவாறாக பாடங்களைப் பிரித்து அவற்றுக்கேற்ப விகிதாசாரத்தின் படி அனுமதிகளை வழங்கினாலும் நாட்டின் பாடசாலைகளுக்கிடையிலும், தனிப்பட்ட ரீதியிலும் இம்முறையை அமுல்படுத்துவதில் பாரிய சிக்கல்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினர் எதிர்நோக்குகிறார் கள். இதனை சமாளிக்கவும் அவர்களால் முடியவில்லை.

### மனைப்பொருளியல் நெறி

தற்போது இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.க.பொ.த.சாதாரண தர பரீட்சை முடிவுகள் வெளியாகி மாணவர்கள் உயர்தர வகுப்புக்களுக்கு அடியெடுத்து வைத்துள்ளனர். இந்நிலையில் மாணவர்களுக்கிடையில் எப்பாடத்தை தெரிவு செய்வது என்பதில் குழப்பம் ஏற்படுகின்றது. அந் நிலையில் இக்கட்டுரை அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும் என நம்பப்படுகிறது. முக்கியமாக இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு பாட நெறி மனைப்பொருளியல் ஆகும்.இப்பாட நெறி முதன் முதல் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டுளளது. கடந்த கல்வி ஆண்டில (2001-2002) பல்கலைக்கழக அனுமதி முறையில் மனைப்பொருளியல் என்ற பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு மாணவர்கள் தற்போது கல்வியை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.இது தான் முதல் வாய்ப்பென்பதால் மாணவர்களின் எண்ணிக்கை குறைவு. ஆனால் இதன் முக்கியத்துவம் பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தப்படுமானால் தொடர்ந்து பலர் இதனைத் தொடர்ந்து கற்க ஆர்வமாக முன்வருவார்கள் என நினைக கிறோம்.

ஒரு சில பாடசாலைகளில் மனையியல் உயர் தர வகுப்பில் கற்பிக்கப்படுகிறது.இத்தகைய புதிய நெறிகள் மாணவர்கள் மத்தியில் பிரபல்யமடையாத பாடங்களாகும். ஆனால் இவை மாணவர்களுக்கு மிகவும் நல்ல வழிகாட்டியாக எதிர்காலத்தில் அமையக்கூடியவை. பல பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் மட்டுமே மனையியல் என்ற பாடம் கற்பிக்கப்படுகிறது. அதிகமான மாணவர்கள் கற்க முன்வருவதுமில்லை.இது எமது அறியாமை. அதைக்கற்பதால் எதிர் காலம் இல்லை.பெண்கள் மட்டுமே கற்கவேண்டும். ஆண்கள் கற்பது தவறு; கற்க முன்வருவதுமில்லை. இத்தகைய மனப்பாங்கு மாறவேண்டும். ஏனெனில் இவ்வளவு காலமும் இப் பாடநெறி பல்கலைக்கழக மட்டத்தில் இருந்ததில்லை. ஆனால் தற்போது அது ஒரு பாடஅலகாக பல்கலைக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் பல மாணவர்களுக்கு இதனால் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே உயர் வகுப்பு மாணவர்களே ஏனைய பாடங்களைப்போன்று இப்பாடத்தையும் ஒன்றாக கற்க முன்வாருங்கள். பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னின்று இப்பாடத்தை உயர் தர வகுப்பில் கற்பித்தால் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியைப்பெற்றுத்தர முடியும். அண்மையில் வெளி வந்த சாதாரண தர பரீட்சை முடிவுகளின் பின் மாணவர்கள் எந்தத்துறைக்குப் போவது என குழம்பிப் போயுள்ளார்கள். இத்தகைய பாடங்களை பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதன் மூலம் நாட்டுக்கும்,வீட்டுக்கும் நல்ல ஒரு பிரஜையை உருவாக்கிய பெருமை தங்களை வந்தடையும்.

### ஆண்களும் கற்கலாம்

கலைப்பிரிவு மாணவர்கள் மட்டுமல்ல.விஞ்ஞான பிரிவு மாணவர்களும் மனைப்பொருளியலை ஒரு பாடமாகக் கற்கலாம்.இது ஒரு விஞ்ஞான ரீதியான கற்கை முறை என்பதை மனதில் இருத்திக்கொள்ளுங்கள். இந்திய நாட்டில் மாணவர்கள் மருத்துவத்துறையை தெரிவு செய்த பின்னர் அடுத்துத்தெரிவு செயவது இந்த மனைப்பொருளியல் துறையையே.அந்தளவுக்கு அங்கு இப்பாடத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் அறிந்துள்ளார்கள். அது போன்று இங்கும் இப்பாடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாடசாலையில் அறிமுகப்படுத்த முன் வாருங்கள். மாணவர்களே சகமாணவர்கள்,நண்பர்கள் தெரிவு செய்வது போன்று நீங்களும் யோசிக்காமல் விருப்பமுடன் புதிய பாடங்களை தெரிவு செய்வதன் மூலம் நல்ல முறையில் கற்று தேர்ச்சியடைய முடியும்.இப்பாடத்திற்கு பெண்கள் மட்டும்தான் உரித்தானவர்கள் என்று எண்ணுவது தவறு, ஆண்களும் தெரிவு செய்யலாம்.

மனைப்பொருளியலில் உள்ள பல பாட அலகுகளில் விஞ்ஞானம் சம்பந்தமான பல்வேறு அம்சங்கள் அறிவியல் ரீதியாக திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன.

உடற்கூற்றியல் (Physiology)
நுண்ணுயிரியல்( Microbiology)
பிள்ளை விருத்தி (Child development)
உயிரியல் இரசாயனம் (Bio chemistry)
புடைவையும் உடையமைத்தலும் (Textile & Clothing)
உணவு விஞ்ஞானம் (Food science)
மனைநிர்வாகம் (Home management)
போசாக்கும் உணவும் (Nutrition & Dietetics)

போன்ற பலவகையான விஞ்ஞான, மருத்துவக்கூறுகளை உள்ளடக்கியுள்ளன. எனவே பெண்கள் தான் இந்தப்பாடத்தை கற்க உகந்தவர்கள் என்பதை விட ஆண்களும் இப்பாடத்தை பயிலலாம் என்பது இதனால் தெளிவாகின்றது.

### விசேட அனுமதி

குறிப்பாக கலைப்பிரிவு மாணவர்களைப்பொறுத்தவரை நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களும் பல வகையான பாடங்களை கற்கை நெறியாகக் கொண்டுள்ளன. இந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் பல பாடங்கள் புதிதாக இந்தக்கல்வி ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.மானிய ஆணைக் குழுவினர் கலைப் பாடங்களைப் பொறுத்தவரை இரு வகையான பல்கலைக் கழக அனுமதியை நடைமுறையில் கொண்டுள்ளனர்.

1.சாதாரண அனுமதி
2.விசேட அனுமதி (Special intake)

சாதாரண அனுமதி முறையில் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வெட்டுப் புள்ளிக்கு மேலே புள்ளிகளைப் பெற்றவர்கள் பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்படுகிறார்கள். இவர்களின் தெரிவுப்பாடங்களாக அங்கீகரிக்கப்பட்ட கலைப் பிரிவைச் சேர்ந்த எல்லாப் பாடங்களும் அமையும்.ஆனால் விசேட அனுமதி முறை என்பது பல்கலைக்கழக தெரிவுக்கு உட்படாமல் வாய்ப்புக்கிடைக்காமல் ஆனால் ஓரளவுக்கு வெட்டுப்புள்ளிக்கு அண்மித்ததாகப் புள்ளிகள் பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.இவர்கள் க.பொ.த (உயர்தர)பிரிவில் கற்ற பாடங்களில் அடிப்படையில் நேரடியாகவே அந்தந்தப்பாடங்களுக்கு தெரிவு செய்யப்படுகிறார்கள். உதாரணமாக க.பொ.த.வில்இந்து நாகரிகத்தையோ கிறிஸ்தவ நாகரிகத்தையோ ஒரு பாடமாக கற்கும் மாணவர்கள் பல்கலைக்கழகத்திலும் அந்தப்பாடத்தையே தொடர்ந்து கற்க வேண்டும். அவர்கள் பல்கலைக்கழக வாழ்நாளில (3அல்லது4 வருடங்கள்) தொடர்ந்து இப்பாடத்தையே கற்கவேண்டும். இவர்கள் விருப்புப் பாடமாக மற்றைய பாடங்களில் ஒன்றை தெரிவு செய்யலாம். அது மட்டுமன்றி இப் பாடத்தை மட்டும் தான் (இந்து நாகரிகம்)சிறப்புப்பாடமாகக் கற்க முடியும். ஏனைய பாடங்களை அவ்வாறு கற்க முடியாது.

**கலாநிதி சுபதினி ரமேஷ்**
**இணைப்பாளர் மனைப்பொருளியல்**
**யாழ். பல்கலைக்கழகம்**

மேற்கூறிய விசேட அனுமதிக்குட்பட்டு பாடசாலை மட்டத்தில் கற்பிக்கப்படாத பாடங்களாகவும் பல கற்கை நெறிகளை ஆணைக் குழுவினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். அதில் முக்கியமாக மொழியியல்,ஆங்கில இலக்கியம்(யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை உயா வகுப்பில் அதனைக் கற்பிப்பது மிக மிகக்குறைவு. அரிதென்றே கூறலாம்) சைவசித்தாந்தம் ,தொல்லியல், மனைப் பொருளியல்,மெய்யியல், உளவியல் என்பன குறிப்பிடத்தக்கவை.விசேடமாக மனைப்பொருளியலைப் பொறுத்தவரையில் இதுவரை கலைப்பிரிவு மாணவர்களுக்கே இத்தகைய அனுமதி முறையில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.ஆனால் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினர் விஞ்ஞானப் பிரிவினரையும் இக்கற்கை நெறிக்குள் உட்படுத்தவேண்டும்.இதற்கு ஆவன செய்ய வேண்டியது பாடசாலைகளும் பல்கலைக்கழக சமூகத்தினருமே ஆகும். இதற்கான முயற்சிகளை முன் எடுக்கவேண்டிய தேவை இக்காலத்தில் அவசியமாகிறது.

### வழிகாட்டல்

எனவே பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் நடைமுறையிலுள்ள பாடங்களை மட்டுமல்லாமல் வாழ்க்கைகு உகந்த செயற்பாடுகளைக்கொண்ட மனைப்பொருளியல் போன்ற பாடங்களையும் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் கற்பிக்க முயற்சி எடுக்க வேண்டும்.மாணவர்கள் இவற்றை நாடி வர வழி செய்யுங்கள்.அதன் மூலம் பல்கலைக்கழகம் செல்ல தகுதி அற்றவர்கள் நாங்கள் என்ற நோவுடன் ஏங்கித்தவிக்கும் மாணவர்களை அரவணைத்து இத்கைய மார்க்கத்தில் செல்ல வழிகாட்டுங்கள்.□

## வைகாசி விசாகப்பொங்கல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சித்தியம்புளியடி சித்தியம்பதி அண்ணமார் ஆலய வைகாசி விசாகப்பொங்கல் விழா எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

(உ)

## தேர்வு நிலையம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையால் தரம் 5,6தேர்வு நாடிகளுக்கு இன்று கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவிருந்த செய்முறைப் பரீட்சைகள் அனைத்தும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என வட இலங்கை சங்கீத சபைத்தலைவர் பி.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(உ-5)

## வகுப்புக்களில் அனுமதிக்கும்

# மாணவர் தொகையை 40 ஆக மட்டுப்படுத்த வேண்டும்

### இ. த. ஆ. ச. தீர்மானம்

(யாழப்பாணம்)


பிரபல பாடசாலைகளில் உள்ள வகுப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக்கூடாது, ஒரு வகுப்பில் தலா 40 மாணவர்களுக்குமேல் அனுமதிக்கக் கூடாது போன்றன உள்ளிட்ட 16கோரிக்கைகளை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுக்கவுள்ளது.

கடந்த 12ஆம்திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும்- யாழ்மாவட்ட அதிபர் மன்றம் ஆசிரியர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில மேற்படி கோரிக்கை தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மேலும் கல்விக் கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் இருந்து கஷ்டப் பிரதேசங்களுக்குரிய வெற்றிடங்களை நிரப்பவேண்டும்.

* பதில் கடமைக்காக அதிபர்கள,உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருககான விளம்பரங்கள் கோரப்படும்போது வலய மட்டத்தில் மட்டுப்படுத்தாமல் மாவட்ட மாகாண மட்டத்தில் கோருதல் வேண்டும்.இவை பொதுத் திட்டத்தின் அடிப்படையின் கீழ் வழங்கப்படல் வேண்டும்.
* அதிபர்கள்,ஆசிரிய ஆலோசகர்கள்,உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் தங்கள் கடமையை மேற்கொள்ள மோட்டார் சைக்கிள்களை வழங்கல் வேண்டும்.
* ஆசிரியர் சேவை உள்வாங்கல்களை விரைவுபடுத்த முயற்சி செய்தல் வேண்டும்.
* ஆசிரியர்கள்,அதிபர்களுக்கான கருத்தரங்கினை சனி,ஞாயிறு தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் வைப்பதை நிறுத்தவேண்டும்.
* ஆசிரியர்கள் ,அதிபர்களின் நிலுவைகளை அவர்களுக்கு கடித் மூலம் தெரிவித்தல் வேண்டும்.
* அவர்களுக்கு இடர் உதவிக் கடனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* தகவல் சேகரிப்பில் ஆசிரியர்கள், அதிபர்களின் வேலைப்பளு கூடுவதால் திட்டமிடல் பகுதியில் தகவல்களை பெற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டும்.
* அவாகளுக்குரிய நட்ட ஈட்டுக்கு அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் நட்ட ஈடு வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.
* யாழ்.வலயத்தில் உள்ள ஆசிரியர்கள் பொது வேலைத்திட்டத்தின் கீழ் இடமாற்றம் செய்யப்பட நடவடிக்கை எடுத்தல் .
* பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்கப்படும்போது வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் வழங்கப்பட வேண்டும்.
* பாடசாலைகளுக்கு சுத்திகரிப்பு தொழிலாளர்களை நியமித்தல் போன்ற கோரிக்கைகளை விடுப்பதென இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலர் கா.மகாசிவம் யாழ். மாவட்ட ஆசிரியர் சங்கச் செயலாளர் க. குமாரசாமி மேற்படி சங்கத்தின் சிரேஷ்ட செயலாளர் பஞ்சலிங்கம் ஆகியோா கலந்து கொண்டனர். (உ-10,4)



## சாயி அருளமுதம்

துன்பமடைந்தோருக்காக உங்கள் இதயத்தை அனுதாபத்தால் நீங்கள் நிரப்பிய பின்னரே பகவான் உங்கள் மீது அனுக்கிரகத்தைப் பொழிவார். தனது பக்தியினாலும் நற்பண்புகளாலும் திரௌபதி அனுக்கிரகத்தைப் பெற்றாள்.தனக்கு மிகவும் கடுமையான வேதனைகளேற்பட்ட போதிலும் சீதை வாழ்க்கையின் மிக உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடித்தாள.அவளைக்கடத்திய இராவணனால்,அவள் சிறை வைக்கப்பட்டிருந்தாள். ஆயினும்,அவளைத் தனது தோள்மேல் தாங்கிச் சென்று இராமரிடம் சேர்ப்பிப்பதாக அனுமன் கூறிய பொழுது சீதை அதற்கு இணங்கவில்லை. அப்படிச் செய்தால் இராவணன் செய்த குற்றத்துக்கு அவனுக்கு தண்டனை அழித்து சீதையை மீட்டெடுக்கும சந்தர்ப்பம் இராமருக்கு இல்லாமல் போய்விடும் என்பதனாலேயே அனுமனின் வேண்டுகோளைச் சீதை நிராகரித்தாள். சரியான தர்மத்தின்பாற்பட்ட முடிவு அதுவே.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# உலக சூழல் தினத்தை யொட்டி விழிப்புணர்வு வாரம் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

அடுத்தமாதம் 5ம் திகதி உலக சூழல் தினமாகும். இதனை முன்னிட்டு இன்றுமுதல் அடுத்தமாதம் 4ம் திகதி வரை உலக சூழல்தின விழிப்புணர்வு வாரமாக தமிழீழ பொருண்மிய மதியுரையகத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

உலக சூழல் தினத்தை முன்னிட்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த விழிப்புணர்வு வாரத்தில் தமிழர் தாயகத்தில் சூழலைப் பாதுகாக்க அனைவரும் விழிப்புணர்வு கொள்ளவேண்டுமென தமிழீழ பொருண்மிய மதியுரையகம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த இருபது வருடங்களாக தமிழர் தாயகத்தில் இடம் பெற்ற யுத்தத்தினால் 15 லட்சம் தென்னை மரங்களும் 32 லட்சம் பனை மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன இதனால் சூழலின் சமநிலை பாதிப்படைந்துள்ளது.

இந் நிலையில் சூழலைப் பாதிக்கும் நடவடிக்கைகளான கிருமிநாசினி, உரவகைப் பாவனை மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனை என்பவற்றை கட்டுப்படுத்தவும் இதுதொடர்பில் பொது மக்களையும், மாணவர்களையும் விழிப்புணர்வு கொள்ளுமாறும் பொருண்மிய மதியுரையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி விழிப்புணர்வு வாரத்தில் பாடசாலைகளில் சிரமதானம் செய்தல் விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்துதல், மரநடுகை,சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல் கொடிவிற்பனை மற்றும் ஆய்வரங்குகள் போன்ற நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (த)

## உடத்தலவின்னபடுகொலை பிணை விண்ணப்பங்கள் உயர் நீதிமன்றத்தில்

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை வழக்கில் சம்மந்தப்பட்ட அனுருத்த ரத்வத்தை உட்பட்ட 15 பிரதிவாதிகளும் கொழும்பு மேல்நீதிமன்றில் பிணை வழங்கக்கோரி தாக்கல் செய்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை உடனடியாக உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி மேல் நீதிமன்றில் உள்ள 3 நீதிபதிகள் அடங்கிய குழுவிற்கு உத்தரவிட்டுள்ளது.

உடத்தலவின்ன . படுகொலை சம்மந்தமாக தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனுருத்த ரத்வத்தை உட்பட்ட 15 சந்தேக நபர்களையும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களே நிராகரிக்கப்பட்டன.

இதனை அடுத்து நேற்று முன்தினம் மாலை இம்மேன் முறையீட்டு விண்ணப்பங்கள் உயர் நீதிமன்றில் சமரப்பிக்கப்பட்டன. (உ-10)

## படைச் சிப்பாய்- பொதுமகன் நீர்வேலியில் கைகலப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிச் சந்தியில் நேற்றிரவு 8.00 மணியளவில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் பொதுமகன் ஒருவரும் கைகலப்பில் ஈடுபட்டனர்.

கைகலப்புச் சம்பவம் தொடர்பாக இராணுவத்தினரால் கோப்பாய்ப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிசார் இராணுவச் சிப்பாயுடன் கைகலப்பில் ஈடு பட்ட நீர்வேலியைச் சேர்ந்த நடராஜா-தர்மராஜா (வயது 48) என்பவரை யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்றிரவு 10.30 மணியளவில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

சட்ட வைத்திய அதிகாரி சிறிராஜேஸ்வரன் விசாரணைகளை மேற்கொண்டார். (த)

### பிரதமரின் ...

அவர்களை சமாதானச் செயலகப் பணிமனைக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு இடம் பெற்ற சிறிய கலந்துரையாடலை அடுத்து பிரதமரின் கடிதத்தை நோர்வேத் தூதரக அதிகாரி தோமஸ் ஹக்லண்ட் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனிடம் கையளித்தார்.

இதனையடுத்து தூதரக அதிகாரிகள் பிற்பகல் 3.30மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கொழும்பை வந்தடைந்துள்ளனர். (இ)

## சிசுவின் சடலம் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடிப்பகுதியில் சிசுவின் சடலமொன்று புதைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று கைதடிப்பகுதி மக்கள் இச்சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸாருக்கு கொடுத்ததகவலை அடுத்தே பொலிஸார் இதனைக் கண்டுபிடித்துள்ளனர். (இ-4)

## உள்ளூராட்சித் தேர்தல்

# சட்ட மூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள உளளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனுக்கோரி தேர்தல் நடத்துவது தொடர்பாக அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்திற்கு எதிராக மனு ஒன்று நேற்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமரசேகரா என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம் மனுவில் பிரதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் மூன்றில் இரண்டு பெரும் பான்மை பெறவேண்டும் என்றும் அதன் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். (வ)

## 'கவின் தமிழுக்கு' ஆக்கங்களை அனுப்பலாம்

(பருத்தித்துறை)

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களம், திமிழ் மொழித்தினம் தொடர்பாக வருடம் தோறும் வெளியிட்டு வரும் ''கவின் தமிழ்'' சிறப்பு மலரை இவ்வருடமும் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இம்மலரை சிறப்பாக வெளியிடுவதற்கு மாணவர்களின் தரமான ஆக்கங்களையும் ஓவியங்களையும் அனுப்பிவைக்குமாறு சகல அதிபர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.இவ்வாக்கங்களை அடுத்த மாதம 30ம் திகதிக்கு முன்னர் கவின்தமிழ் இதழ் ஆசிரியர் தமிழ் மொழிப் பிரிவு மாகாணக் கல்வித் திணைக்களம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்.மகாலிங்கம் கேட்டுள்ளார.(உ-52)

# மின்சாரம் தாக்கியதில் இளைஞன் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இருந்து உறவினர்களைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் வந்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கியதில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை 7மணிக்கு கோப்பாய் தெற்கில் இவ்வனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் முள்ளியவளை குமிள முனையைச் சேர்ந்த வேல்முருகு நீதன் (வயது23) என்ற இளைஞனே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

வன்னியில் இருந்து உறவினர்களைப் பார்ப்பதற்காக கோப்பய்க்கு வந்த பிரஸ்தாப இளைஞன் நேற்றுக் காலை இயற்கைக் கடன் கழிப்பதற்காக மலசல கூடம் சென்ற வேளை அங்கு மின் ஒழுக்கில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பின்னர் நேற்றைய தினமே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ-7,5)

## தவறி வீழ்ந்தவர் ஆபத்தான நிலையில்

(யாழ்ப்பாணம்)

வீட்டுக் கூரையின் மேல் ஏறிய போது தவறுதலாக கீழே விழுந்து படுகாயமடைந்த ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை புதுக்குடியிருப்பு வல்லிபுரத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த செ. சித்திர வேலாயுதம் (வயது 38) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

ஆபத்தான நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இவர் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-7)

### ஜப்பான்...

வைக்கப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்கு பற்றினாலும் பங்கு பற்றாவிடாலும் அமெரிக்காஇம் மாநாட்டில் கலந்து கொள்ள இருப்பதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. இதேவேளை விடுதலைப் புலிகள் இம் மாநாட்டில் கலந்து கொண்டால் தாங்கள் பங்கு பற்றப் போவதில்லை என இந்தியா அறிவித்துள்ளது. இந் நிலையில் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் யாவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மாநாடு நடைபெறுவதற்கான உறுதிப்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்ததும் அமைச்சர் மிலிந்த மொறகொட எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பு திரும்பவுள்ளார்.

ஜப்பானில் நடைபெறவுள்ள உத்தேச மாநாட்டில் இலங்கைக்கு கணிசமான நிதியுதவிகள் கிடைக்கவிருப்பதாகவும் ஜப்பானிய முதலீட்டாளர்கள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்றும் அங்கு நடை பெறவிருப்பதால இலங்கையின் முதலீட்டு வர்த்தகத்திற்கு நல்ல எதிர்காலம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(ம)

### இடைக்கால...

1995-ம் ஆண்டு முன்வைத்த வடக்குக் கிழக்கு நிர்வாக சபைக்கும், ஐக்கிய தேசிய முன்னணி சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபைக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத திரும்பினால் வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபையொன்றை வழங்கலாமென்று 1994-ம் ஆண்டு ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.ஆனால் அதனை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தவறான முறையில் பிரசாரம் செய்ய முயல்கிறது என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை தென் மாகாண சபை அமைச்சர் என்.கே.ரஞ்சித் கொலை செய்யப்பட்டமையையும் சுதந்திரக் கட்சியின் மத்திய குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.(ம)


## மாநகரசபை யாழ்ப்பாணம்

**கட்டிட நிர்மாண வீதி அமைப்பு வேலைக்குத் தேவையான மூலப்பொருட்களை விரைவாக வழங்கக்கூடியவர்களை கோருதல்**

2003ம் ஆண்டுக்கான மாநகரசபையின் அவசர வேலைத்திட்டங்களிற்குத் தேவையான கீழ்க்காணும் மூலப் பொருட்களை விரைவாக மாநகரசபைக் களஞ்சியத்திற்கு கொண்டுவந்து ஒப்டைக்கக் கூடிய வழங்குனர்கள் தங்களால் ஒருமாத காலத்தினுள் ஒப்படைக்கக்கூடிய மூலப்பொருட்களின் அளவும், ஒரு கியூப் கல், மணல் வேறு பொருட்களுக்கான விலையையும் கொண்டதாக படிவ அமைப்பில் தயாரித்து 02.06.2003ம் திகதி மு.ப.11.00 மணிக்கு முன் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்குமாறும், அதனைத் தொடர்ந்து மு.ப.11.00 மணிக்கு இடம்பெறும் கலந்துரையாடலிலும் பங்குபற்றுமாறும் தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

1) கிறசர் சல்லி, கண்டகல் 1/2", 3/4", 1 1/2", 1", 2", 4", 6", 9"- ஒவ்வொரு கியூப்பின் விலை குறிப்பிடவும்.
2) நாகர்கோயில் மணல், அரியாலை மணல், கண்டாவளை மணல்,ஊரிமண், செம்மண் ,கிறசர் டஸ்ட் வேறும் பாவனையில் உள்ள மணல்- ஒவ்வொரு கியூப்பின் விலையையும் குறிப்பிடவும்.
3) ஒரு மாத காலத்தில் வழங்கக்கூடிய பொருட்களின் அளவினைக் குறிப்பிடவும்.

இ. இராமலிங்கம்
மாநகரஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகரசபை
யாழ்ப்பாணம்.

(C/6234)



## மரண அறிவித்தல்

**திருமதி.துரைறாஜா. பார்வதிப்பிள்ளை**

(பொன்னாபரணம்)

நல்லூர் வீரமாகாளி அம்மன் றோட்டை பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. பார்வதிப்பிள்ளை காலமாகிவிட்டார்.அன்னார் காலம் சென்ற திரு. முத்தையா (சட்டம்பியார்) திருமதி. செல்லம்மாவின் அன்பு மகளும், காலம் சென்ற வைத்தியர் துரைறாஜாவின் அன்பு மனைவியும், காலம் சென்ற பரமநாதன் (பரமசாமி) அன்புச் சகோதரியும், காலம் சென்ற (வரதறாஜா). அபயறாஜா (கிறிஸ்ரி), வரதலஷ்சுமியின் தாயாரும், சந்திராவதி, அழகேஸ்வரி, சோமசூரியசிங்கம் அவர்களின் மாமியாரும். நந்தகுமார் (FRANCE), திருமதி. நந்தினி, ஸ்ரீதரன் (SWISS), உதயகுமார் (FRANCE), சுரேஷ்குமார் (FRANCE), வசந்தகுமார் (LONDON). நிலாணி, தர்ஷினியின் அப்பம்மாவும், ஜனார்த்தனன், ஜனீத்திரா, காண்டீபன், செந்தூரனின் அம்மம்மாவும். பிருந்தா, ராஜ்குமார், அனித்தா (FRANCE), கீர்த்தனா, திஷோத் (SWISS), மைந்தன், மைதிலியின் (FRANCE) பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் ''சிங்கம் இல்லம்'' ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் மேற்கில் 29.05.2003 மாலை 2.00 மணிக்கு நடைபெற்று தாவடி மயானத்தில் தகனம்செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சிங்கம் இல்லம்"
ஸ்ரேஷன் வீதி,
கோண்டாவில் மேற்கு. (6984)

தகவல்
P. S. சிங்கம் (மருமகன்)
(சிங்கம்ஸ் பார்மஸி)



உங்கள்
வலம்புரியின்
சங்குநாதம்

* இழுபறியில் சிக்கிய இடைக்கால நிர்வாகம்.
* கலைஞரின் மகன் கைது.
* இயற்கை செய்த பேரழிவு.
* வியாசரின் பதில்.
* ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
* ஆலடி மாநாடு (நகைச்சுவையுடன் கூடிய அதிரடி)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை 14/-


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.